DISTRICT HISTORY

MADRAS

ஜில்லா சரித்திரம்

சென்னப்பட்டணம்

சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகா

P. V. ஜகதீச ஐயரால்

எழுதப்பட்டு

சென்னை சட்டசபைத் தலைவர்

னம் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை

அவர்கள் முகவுரையுடன்

கூடியது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1924

[ights reserved]

[விலை 5 அணா

FOREWORD

I cannot commend too highly the educational value of this series of *gazetteers* in Tamil. I have been long wishing that the people of every town and village should have ready to hand a complete guide to objects of local interest and particularly to local antiquarian remains; and this series by a competent archæologist like Mr. P. V Jagadisa Aiyar will go far to fulfil this desideratum.

Fort St. George,
19-10-1924.

L. D. SAWMIKANNU.

AUTHOR'S PREFACE

Love for one's own country and institutions is a virtue highly essential in all its ... ns for its prosperity and well-being. ... attempt should be made therefore to ... h and cultivate this virtue by *one and all*. ... tudy of the history of one's own country ... neral, and one's own district in particular should perforce bring about the desired ... in this direction. Here we may refer to the statement in the *Report of the fifteenth Provincial Educational Conference* of 1923. 'It is

one of the fundamental principles of pedagogy that the History and Geography to be taught to the young should start with and be based on the study of the History and Geography of the district or region in which the pupil lives and be correlated to his actual daily experience.' It is

the study of the History of our ancient times and ancient rulers that should rouse in our youths a feeling of reverence and esteem for our ancient rulers and their works and institutions.

Our youths, nay our countrymen and countrywomen too, seem to be under the impression that our land, unlike others, cannot boast of a history from the records of our rulers and historians. This is perhaps due to the fact that books on the history of our land put into their hands are those containing materials culled by foreigners. Here we may ... country histori- ... ent days and

ancient rulers have been carefully pres... *imperishably* and *unalterably* in Epigraphical ... cords on temple walls, copper-plate grants ... so on.

Our present Government have collec... and published in the *Gazetteers* of the distri... and the *Reports of the Epigraphical* a... *Archæological departments* a good deal of va...able historical information relating to ea... district, especially of ancient days and anci... rulers. From out of the facts based on the... research works, a series of booklets conta... ing summaries of historical events and o... particulars of the various districts, is issu... in vernaculars, for the use of our school-go... boys and girls and this volume is one of the...

The plan adopted in compiling thes... bo... lets is that of giving particulars relat...g ... the situation, people etc., of each distric... n ... general introduction, the political ... ist... proper from the beginning up to the occu... tion by the British in chapter I, and ... Gazetteer relating to the historically ... ort... places in chapter II. In the case of ... Madras district alone, the history relating ... the acquisition by the English of the vario... parts of the presidency is given in the intro... duction, the history of the city together with the founding of Fort St. George in chapter ..., and the various institutions useful to the people, maintained by government and by private bodies, in chapter II.

June 23, 1924. P. V. JAGADISA AYYAR.

பொருளடக்கம்

விஷயம்	பக்கம்
டிகை (சென்னைராஜதானி விவரங்கள்)	1-12
தச சரித்திரம் - - - -	13
சேஷ இடங்கள் - - -	27



பூர்வபீடிகை

சென்னை ராஜதானி விவரங்கள்

தற்காலத்திய சென்னை ராஜதானி இந்திய தீபகல்பத்தின் தெற்கில் உள்ளது. வடகிழக்குத் தென்மேற்காக இது 950 மைல் நீளமும், அதிக அகலமுள்ள பாகத்தில் 450 மைல் அகலமும் வாய்ந்தது. (படம் 1.) வடதிசை தவிர மற்றெல்லாத் திசைகளிலும் இது சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கிறது. சென்னை ராஜதானியில் 26 ஜில்லாக்கள் அடங்கியிருக்கின்றன.

அவையாவன:—

1. கஞ்சம்
2. விசாகபட்டணம்
3. கோதாவரி
4. கிருஷ்ணா
5. குண்டூர்
6. நெல்லூர்
7. கடப்பை
8. அனந்தபுரம்
9. பல்லாரி
10. கர்நூல்
11. சென்னப்பட்டணம்
12. செங்கற்பட்டு
13. சித்தூர்
14. வடஆற்காடு
15. தென்ஆற்காடு
16. தஞ்சாவூர்
17. திரிச்சிராப்பள்ளி
18. மதுரை
19. ராமநாதபுரம்
20. திருநெல்வேலி
21. சேலம்
22. கோயம்புத்தூர்
23. நீலகிரி
24. மலையாளம்
25. தென்கன்னடம்
26. அஞ்செங்கோ

அவைகளுள் சென்னைமா நகரம் ஒன்று. இதில் ஐந்து சுதேச ராஜ்ஜியங்கள் உண்டு. அவை சாந்தூர், பங்கனபள்ளி, புதுக்கோட்டை, கொச்சி, திருவாங்கூர் முதலியன.

மேற்கூறியுள்ள சுதேச ராஜ்ஜியங்களின் விஸ்தீர்ணத்தை நீக்கி இந்த ராஜதானி லக்ஷத்து நாற்பத் திராயிரத்து இருநூற்றறுபது சதுரமைல் விஸ்தீரண முள்ளது.

இத்தேசத்தின் இயற்கை அமைப்பை அநுஸரித்து இதை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். நீளமும் அகலமும் வாய்ந்த கீழ்சமுத்திரக்கரை ஓரம், குறுகலான மேற்கு சமுத்திரக்கரை ஓரம், மத்திய பீடபூமிப் பிராந்தியம் என்ற பாகங்களே அவை. இப்பிரிவுகள் இயற்கையாய் நிர்ணயிக்கப்படுவது கிழக்குத் தொடர்ச்சிமலே, மேற்குத் தொடர்ச்சி மலே என்னும் இரு மலேகளின் தொடர்ச்சிகளே. கிழக்குத் தொடர்ச்சிமலே சூடியாநாகபுரம் (Chutia Nagpur) என்னுமிடத்திய மலேகளின் தொடர்ச்சியே ஆகும். இது இந்த ராஜதானியின் முழுநீளமும் சென்று நீலகிரியில் மேற்குத் தொடர்ச்சிமலேயைச் சந்திக்கிறது. மேற்குத் தொடர்ச்சிமலே இந்துமஹா சமுத்திரக் கரை ஓரமாகத் தெற்கு நோக்கிச் சென்று சமுத்திரத்திலிருந்து 10 மைல் முதல் 50 மைல் தூரத்தில் உயர்ந்திருந்துகொண்டு இங்கு பருவக்காற்றினுல் ஏற்படும் மழையின் பெரும்பாகத்திற்குக் காரணமாக இருக்கிறது. மண் படிந்துள்ள இம் மலேத்தொடர்ச்சியில் அழகிய காடுகள் வாய்ந்திருக்கின்றன. மூங்கில் இங்கு பயிராவது போல் வேறு எங்குமே பயிராவ தில்லே.

மேற் கூறிய இரண்டு மலேத்தொடர்களுக்கு மிடையிலுள்ள பாகங்கள் பீடபூமிப் பிராந்தியங்கள். அதிகத் தெற்கிலுள்ள மத்தியபீடபூமிப் பிராந்தியந்தான் மைசூர் ராஜ்ஜியமும் சென்னே ராஜதானியின் அனேக ஜில்லாக்களும் அடங்கியுள்ள பாகம். இது 1000 அடி முதல் 3000 அடி வரைக்கும் உயர்ந்திருக்கிறது. மேற் கூறியுள்ள மலேப்பிரதேசங்கள் அன்னியில் வேறு சில குன்றடர்ந்த பிரதேசங்

களும் இந்த ராஜதானியில் உண்டு. அவைகளில் முக்கியமானவை சேலம் ஜில்லாவிலுள்ள சேர்வராயமலைப் பிராந்தியம், கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள ஆனைமலைப் பிராந்தியம், மதுரை ஜில்லாவிலுள்ள பழனிமலைப் பிராந்தியம் முதலியன.

மேற்குத் தொடர்ச்சி மலையில் பாலக்காட்டுக் கணவாய் என்ற ஒரு இடைவெளி உண்டு. இது 25 மைல் அகலமுள்ளது. இதன் மூலமாய்த்தான் தென் இந்தியாவின் முக்கிய இருப்புப்பாதை செல்கிறது.

இந்த ராஜதானியில் மூன்று நதிகள் அதிக முக்கியமானவை. அவை கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்ற பெயர் வாய்ந்துள்ள நதிகள். அவைகளெல்லாம் ஹிந்துக்களது புண்ணிய நதிகள். தவிரவும் விவசாயத்திற்கும், வர்த்தகத்திற்கும் அவை மிகவும் சாதகமுள்ளவை. இவை மேற்குத் தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகி இந்த ராஜதானியின் குறுக்கே தென்கிழக்காக ஓடி சமுத்திர சங்கமமாகின்றன. இந்த நதிகள் மேல் நாட்டுப் பிராந்தியங்களில் பயிரிடுவதற்காவது அல்லது போக்கு வரத்துக்காவது உபயோகமானவைகள் அல்ல. அவைகள் வடிகால்களாக ஏற்பட்டிருக்கின்றனவே ஒழியப் பாய்ச்சற்காலாக உபயோகப்படுவதில்லை. அவை உற்பத்தியாகிய ஆரம்பத்தில் ஓடிவரும் பிராந்தியங்களில், அவை சமுத்திரத்தில்போய் விழுமுன் செழுமையான நதிமுகப் பூமிகளை (Deltas) உண்டாக்கும் பொழுது தடுத்து உபயோகப்படும்படி செய்துகொள்ள முடிகிறது. கோதாவரி நதி பாயும் பூமி 1,12,000 சதுரமைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதன் நீளம் 898 மைல். அதுபோலவே கிருஷ்ணாநதி பாயும் பிராந்தியம் 97,000 சதுரமைல் என்றும், அதன் நீளம் 800 மைல் என்றும்,

காவேரிநதி பாயும் பூமி 28,000 சதுரமைல் என்றும் அதன் நீளம் 472 மைல் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த நதிகளுக்கெல்லாம் உபநதிகள் உண்டு. மேற் கூறியுள்ள நதிகள்போலவே கிழக்குத் தொடர்ச்சிமலைப் பிராந்தியத்திலு மிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, வெள்ளாறு, வைகை, தாம்பிரபாணி முதலியன.

இந்த ராஜதானியின் சீதோஷ்ண நிலைமையையும் விளைபொருள்களையும் நிர்ணயிப்பதும், அவைகளுக்கு சாதகமானதும் தென்வடலாகாக ஓடியுள்ள மலைத்தொடர் ஏற்பட்டிருப்பதினால். பருவக்காற்று இந்துமஹா சமுத்திரத்திலிருந்து கொண்டுவரும் மேகங்களைத் தடுத்து ஏராளமான மழையைப் பொழியும்படி செய்வதும் இம்மலைத்தொடரே.

இந்த ராஜதானியின் தென்பாகத்திய பூர்வீகக் குடிகள் எத்தகையவர்களாக இருந்திருக்கவேண்டு மென்பதை தற்காலத்தில் தென் இந்தியாவில் நமக்குத் துப்புகளாக ஏற்பட்டிருக்கும் அவர்களது பண்டைக்காலத்திய கற்குவியல்கள், கல்மேஜைகள் முதலானவைகளிலிருந்தே அறியலாம். தவிரவும் தெக்ஷிணத்தின் குன்றுகளின் சிகரங்களில் இப்பொழுது காணப்படும் கல் ஆயுதங்களும், ஸ்வல்ப காலத்திற்கு முன்புதான் தெரிந்து திருநெல்வேலியில் ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களிலுள்ள இடுகாடுகளில் அகப்படும் முடிவுபெற்றுள்ள தட்டுமுட்டுச் சாமான்களும் அவர்களது வேலைகளே. இச்சாமான்களில் பல எடுத்துவரப்பட்டுத் தற்காலம் சென்னை எழும்பூரிலுள்ள மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

பூர்வீகக் குடிக ளிருந்த காலத்திற்கும், தேசத்திய சரியான சரித்திர ஆரம்ப காலத்திற்கும் இடையிலுள்ள

காலம் புராணகால மெனக் கூறவேண்டும். ஸ்ரீராமர் லங்கைக்குச் சென்று பத்துத்தலை ராவணனைக் கொன்று சீதா தேவியைத் திரும்பி அடைந்தார் என்ற ராமாயண கதை வெளிப் பிராந்தியங்களிலிருந்து வந்து வட இந்தியாவில் தங்கினவர்களைக் குறிக்கும் விஷயமே என்பது சிலர் அபிப்பிராயம். ஆனால் இது உண்மையான சரித்திரத்தைச் சேர்ந்த தென்று கொள்ள முடியாது. முகம்மதியர்கள் வந்ததுமுதல் ஏற்பட்டுள்ள சரித்திரமே உண்மையான தெனக் கொள்ளவேண்டும். ஆயினும் பௌத்த சக்கிர வர்த்தியான அசோகர் காலத்தில் இந்த ராஜதானியின் வடபாதியாவது, மௌரிய ராஜவமிசத்தினர் கீழிருந்த பிரதேசங்களின் பாகமென்றது சரித்திரத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ள விஷயம். பிறகு படிப்படியாக வந்தவர்கள் பாண்டிய வமிசத்தவர்களும், ஆந்திரர்களும், சாளுக்கியர்களும், கதம்பர்களும், ராஷ்டிரகூடர்களும், மேற்குச் சாளுக்கியர்களும் எனக் கூறலாம். இதற்கிடையில் தெற்கிலும் கிழக்கிலும் சோழ அரசர்கள் தங்களது ராஜ்ஜியத்தைப் பரவச் செய்து வந்தார்கள்.

பதின்மூன்றாவது நூற்றாண்டின் இறுதியில் தென் இந்தியாவிலிருந்த மூன்று பெரிய வமிசங்கள் ஹாய்ஸால, சோழ, பாண்டிய வமிசங்களே. பதினான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் டெல்லி முகம்மதியர்கள் தோன்றினார்கள். 1303-வது வருஷத்தில் டெல்லியில் ஆண்டுகொண்டிருந்த கில்ஜி வமிசத்தினர்கள் தாம் முதன்முதல் தக்ஷிணத்தைப் படையெடுத்தனர். அதற்கு ஏழு வருஷங்களுக்குப் பிறகு மாலிக்காபர் இதைச் சூறையாடிச் சென்றனன். யாதவர்க ளென்ன, ஹாய்ஸாவர்க ளென்ன, கணபதிகள் என்ன, சோழர்க ளென்ன, பாண்டியர்கள் என்ன, இவர்கள் எல்லா

ருமே தோற்கடித்து அடக்கப்பட்டார்கள். தென்பாகம் முழுவதிலும் அரசாங்கம் இஸ்லாத்திருந்தது. முகம்மதிய கவர்னர்கள் ஒவ்வொருவரும் மேன்மையான அரசர்களாகப் பாடுபட்டார்கள். இப்படி இந்த சுல்தான்கள் என்ற முகம்மதியர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தது, விஜயநகர ராஜ்ஜியம் தலையெடுக்க அநுகூலமாயிற்று. அது பெல்லாரி ஜில்லாவிலுள்ள ஹம்பி என்னுமிடத்தைத் தலை நகரமாகக் கொண்டு, அடுத்த ஒன்றரை நூற்றாண்டுகள் வரைக்கும் முகம்மதிய ராஜ்ஜியம் தெற்கில் பரவமுடியாமல் செய்துவந்தது. தவிரவும் இந்த விஜயநகர அரசர்கள் கிருஷ்ணாநதிமுதல் கன்னியாகுமரி வரைக்கும் ஆண்டுவந்தார்கள். அவர்களுள் கிருஷ்ணதேவராயர் காலத்தில்தான் (கி. பி. 1509-1530) இந்தவிஜயநகர ராஜ்ஜியம் அதி உன்னதமானநிலைமை பெற்றிருந்தது. இந்த ராஜ்ஜியம் க்ஷீணித்ததற்குக் காரணம் பாமினி வமிசத்திய சுல்தான்கள் ஒன்று சேர்ந்து அதை எதிர்த்ததுதான். அவர்கள் விஜயநகரத்தை நிர்மூலமாக்கி அதன் அரசனை ஓடி உயிர் தப்பும்படி செய்தார்கள். விஜயநகர ராஜ்ஜியம் பிறகு தலை எடுக்கவே இல்லை. அதன் பற்பல பாகங்கள் சிறிய சிறிய நாயக்கர்கள் என்ற பாளையக்காரர்களது ஆதீனமாகி அவர்களால் குடிகள் மிக்க ஹிம்சையை அடைந்தார்கள். மேற்கூறிய நாயக்கர்களுள் ஸ்திரமாகத் தங்களது நிலைமையை ஒருவாறு செய்து கொண்டவர்கள் மதுரை நாயக்கன்மார்கள். மற்ற தேசத்தின் பாகங்களின்மேல் அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாக பீஜப்பூர், கோல்கொண்டா நாடுகளின் சுல்தான்களிடம் சென்று விட்டது. பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் பீஜப்பூர் சுல்தான்கள் அநேகமாய்க் கர்நாடகம் முழுவதையும் கைக்கொண்டார்கள். இந்த பீஜப்பூர் வமிசத்தின் கீழ்

இருந்துதான் மஹாராஷ்டிரர்கள் தலையெடுத்தனர். படிப்படியாக மேன்மை யடைந்து, இறுதியில் சிவாஜியின்கீழ் அவர்கள் சுயேச்சையை அடைந்தார்கள்.

1686-வது வருஷத்தில் டெல்லி முகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப் பீஜபூரையும், கோலகொண்டாவையும் ஒடுக்கப் படையெடுத்துச் சென்றதுமன்றி மஹாராஷ்டிர அதிகாரத்தையும் குலைக்க முயன்றான். அவ் வருஷத்தில் அவன் பீஜபூரைப் பிடித்துக்கொண்டு, மறு வருஷத்தில் கோலகொண்டாவையும் பிடித்துக்கொண்டான். இவ்விதமாக ஹிந்துக்களிடமிருந்து பிடுங்கிக்கொள்ளப்பட்ட நாடுகள் முகலாய ராஜ்ஜியத்தின் பாகமாக ஏற்பட்டன. ஆனால் ஔரங்கசீப் மஹாராஷ்டிரர்களை ஒடுக்க முடியவில்லை. அவன் சிவாஜியின் மகன் ஸாம்பாஜியைப் பிடித்துக் கொலைசெய்து விட்டது வாஸ்தவமே. ஆனால் மஹாராஷ்டிரர்களது அதிகாரம் அதிகரித்துக்கொண்டு வந்ததே ஒழியக் குறைந்தபாடில்லை. அவர்கள் தக்ஷிணம் முழுதிலுமே சௌத் என்ற வரி வசூல் செய்துவந்ததுமன்றித் தெற்கில் வேறு அனேக இடங்களிலிருந்தும் அவ்வரியை வசூல் செய்துவந்தார்கள். சென்னை ராஜதானியின் சரித்திரத்திலிருந்து அவர்கள் 19-வது நூற்றூண்டு வரைக்கும் மறையவில்லை.

1724-வது வருஷத்தில் முகலாய சக்கரவர்த்திதான் தெற்கில் ஜெயித்த நாடுகளை ஆள ஏற்படுத்தியிருந்த அஸவ்-ஜா (Asafgah) என்றவன் நைஸாம் உல்லக் (Nizam-ul-mulk) என்ற பட்டத்துடன் ஆண்டுவந்தான். அவன் சிறிது காலத்தில் சுயேச்சை பெற்று அவனுக்குப் பின் வந்தவர்கள் எல்லாரும்கூட நைஜாம் அல்லது தக்ஷிண சுபேதார்கள் என்ற பட்டங்களுடன் ஆண்டுவந்தார்கள். தெற்கில் அவர்களுக்

ருக் கீழ்ப்பட்டு கர்னாடகத்தில் ஆண்டுவந்தது கர்னாடக நவாப் அல்லது ஆற்காட் நவாப்.

இதற்கிடையில் க்ஷீணித்த விஜயநகர ராஜ்ஜியத்திலிருந்து உண்டான ஹிந்து ராஜியமாகிய மைசூர் கொஞ்சம்கொஞ்சமாய்ப் பிரபலமாய்க்கொண்டு வந்தது. கடைசியாக அது ஹைதர்அலியின் சாமர்த்தியத்தினால் 1761-ல் அதிக பராக்கிரமம்பெற்றது. பிறகு வந்தவர்கள் போர்த்துகேசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இங்கிலீஷ்காரர்கள் முதலிய ஐரோப்பியர்கள். முதல் முதல் வந்து தங்கினவர் போர்த்துகேசியர்கள். பதினாறுவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர்கள் கள்ளிக்கோட்டை, கோவா என்ற இடங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். இவர்கள் ஒரு நூற்றாண்டு விர்த்திக்கு வந்திருந்து பிறகு டச்சுக்காரர்கள் பிரபலமடைய பலம் குன்றி மறைந்தார்கள். பதினேழாவது நூற்றாண்டின் ஆரம்பம் முதல், கிழக்குத் தீவுகளில் முன்னமே பிரபலமடைந்திருந்த டச்சுக்காரர்கள் பழவேற்காடு, சதுரங்கபட்டணம் முதலான இடங்களைக் கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் அதிசீக்கிரத்தில் போர்த்துகேசியரை அகற்றிவிட்டார்களெனக் கூறலாம். ஆனால் அவர்களது நோக்கம் வியாபாரமே ஒழிய ராஜ்ஜிய ஸ்தாபனம் அன்று.

இந்தியாவின் ஐசுவரியத்தைப் பற்றிக் கேள்வியுற்று வந்தவர்களில் பிரெஞ்சுக்காரரும் ஒருவர். அவர்கள் முதல் முதல் தங்கினார்கள் மடகாஸ்கர் (Madagascar)தீவில். பிந்தி அதை 1672வது வருஷத்தில் விட்டு விட்டு மோரிசு (Mauritius), போர்போன் (Bourbon) தீவுகளுக்கு வந்தார்கள். பிறகு அவர்கள் இந்தியாவுக்கும் வந்தார்கள். பிராங்காய் மார்ட்டின் (Francis Martin) என்ற பிரெஞ்சுக்காரர்

1674 வது வருஷத்தில் புதுச்சேரி நகரத்தை ஸ்தாபித்து பலப்படுத்தினார். அதுவே இந்தத் தீபகல்பத்தில் பிரெஞ்சுக்காரர்களது தலைமை நகரமாக இருந்துவந்தது. இவ்வூரைப்பற்றி **தென்ஆற்காடு ஜில்லா சரித்திரத்தில்** விவரிக்கப்படும். 1742 வது வருஷத்தில் டூப்ளே புதுச்சேரி கவர்னராக வர, அவர் கீழ் ஆங்கில ஈஸ்டு இந்தியா கம்பெனியார்கள் எதிர்த்ததைத் தடுக்கக்கூடியதாக ஏற்பட்டிருந்த ஒரே இடமாக இருந்தது.

ஆங்கிலேயர்களது புராதன ஸ்தலங்கள் நைஜாம் பட்டினமும், மசூலிப் பட்டினமும். இவ்விரண்டிடங்களிலும் 1611-வது வருஷத்தில் காப்டின் ஹிப்பன் (Captain Hippon) என்பவர் பண்டகசாலைகள் ஏற்படுத்தினார். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு மேற்குக்கரையில் ஜாமொரீனது (Zamorin) அனுமதியின்மேல் கிராங்கனூரிலும், கள்ளிக்கோட்டையிலும் தங்குமிடம் ஏற்படுத்திக்கொண்டார்கள். பிறகு 1619-வது வருஷத்தில் பழவேற்காட்டிலும் இன்னொரு இடம் ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆனால் டச்சுக்காரர்களது நிர்ப்பந்தத்தினால் அவர்கள் அதை விட்டு விடும்படி நேர்ந்தது. கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்கு கோலகொண்டா சுல்தானது உத்தியோகஸ்தர்களிடமிருந்து ஏற்பட்ட தொந்தரவினால், இங்கிலீஷ்காரர்கள் 1639 வது வருஷத்தில் சென்னையில் ஒரு தங்குமிடம் ஏற்படுத்திக்கொள்ளும்படி நேர்ந்தது. தவிரவும் நெசவு, சாயம்போடுவது முதலிய கைத்தொழில்கள் நடக்குமிடத்திற் கருகில் ஒரு இடம் தங்களுக் கிருக்கவேண்டுமென்று இங்கிலீஷ்காரர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆர்மகான் (Armagon) என்னு மிடத்தி லிருந்த முக்கிய உத்தியோகஸ்தராகிய பிரான்ஸிஸ் டே (Francis Day) என்றவர் அக்

காலத்தில் வடஆற்காடு ஜில்லாவில் சந்திரகிரியிலிருந்த விஜய நகர வமிசத்தரசரிடமிருந்து மதராஸ்பட்டணம் (Madras) என்ற இடத்தைப் பெற்று அங்கு ஒரு சிறிய கோட்டை (Fort St. George) கட்டி முடித்தார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கீழண்டைக் கரைப்பக்கத்தில் இந்த இடம் கம்பெனிக்காரர்களது பிரதான ஸ்தானமாக ஏற்பட்டது. பிறகு 1690 வது வருஷத்தில் அவர்கள் மஹாராஷ்டிரர்களிட மிருந்து கூடலூருக் கருகில் ஓரிடத்தை வாங்கி அங்கு செயிண்ட் டேவிட் (Fort St. David) கோட்டை என்ற கோட்டையை ஏற்படுத்திக்கொண்டார்கள். இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்த ராஜதானியின் எல்லைக்குள் இங்கிலீஷ்காரர்களுக்குபரங்கிப்பேட்டை, மாதபொள்ளம், விசாகபட்டணம், அஞ்செங்கோ, தலைச்சேரி, கள்ளிக்கோட்டை முதலான இடங்களில் பண்டசாலைகள் ஏற்பட்டுவிட்டன. பிறகு வெகுகாலம் அதாவது 1741 வரையில் இதர ஐரோப்பியர்களோடும் முக்கியமாய் பிரெஞ்சுக்காரர்களோடும், சுதேச மன்னர்களுடனும் போராடி இறுதியில் தங்களது அதிகாரத்தை முற்றிலும் இந்த ராஜதானியில் ஸ்தாபித்தார்கள். ஆனால் இந்த ராஜதானியின் குடிகளது க்ஷேமத்தைக் கருதி இதன் ஆட்சி கம்பெனிக்காரர்களது கையில் விடப்படாது இங்கிலாந்து தேசத்திய அரசரது மேற்பார்வையிலேயே இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு அப்படியே நடந்து வருகிறது.

ஆங்கிலேயர்கள் நாடுகளைச் சேர்த்த விஷயம். 1611-வது வருஷத்தில் மசூலிப்பட்டணத்தில் இவர்கள் வியாபார ஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டார்கள். 1639-வது வருஷத்தில் சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள். 1690-வது வருஷத்தில் தேவனாம்பட்டி

ணத்தில் செயிண்டேவிட் கோட்டையை ஏற்படுத்திக்கொண்டார்கள். 1683-வது வருஷத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் தலைச்சேரியில் கோட்டையை ஏற்படுத்திக்கொண்டார். தேவிகோட்டை பிடிபட்டதிலிருந்து 1749-வது வருஷத்தில் தஞ்சாவூரில் இவர்களுக்கு ஸ்தலம் ஏற்படக் காரணமாயிற்று. சிங்காதனத்திற்குப் போட்டியாக வந்த ஒருவனுக்கு உதவி செய்யாம லிருந்தால் அதைக் கொடுப்பதாகக் கூறியபடி செய்து அவர்கள் அதைப் பிறகு அடைந்தார்கள். மசூலிப்பட்டணத்தையும், வடசர்க்காரின் பாகங்களையும் மிர்ஸாபர்ஜங்கும் ஸலபட்ஜங்கும் (Mirzafar Jang & Salabat Jang) பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். ஆனால் 1759-வது வருஷத்தில் இங்கிலீஷ்காரர்கள் மசூலிப்பட்டணத்தைப் பிடித்துக்கொண்டபொழுது பிரெஞ்சுக்காரர்களது அதிகாரம் போய்விட, அதைச் சுற்றிலு மிருந்த நாடுகளின் பெரும்பாகம் இங்கிலீஷ்காரர்கள் வசமாயிற்று. 1765-வது வருஷத்தில் டெல்லி பாஷா (Padshah) விடமிருந்து வடஸர்க்கார், ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்கப்பட்டதாக ஸனத் (Sannad) ஏற்பட்டது போதாதென்று அக்கொடைக்கு ஹைதராபாத் நிஜாமின்சம்மதத்தையும் பெறவிரும்பினார்கள். 1768வதுவருஷத்தில் உடன்படிக்கையின்மேல் அதை இங்கிலீஷ்காரர்கள் பெற்றார்கள். பிரதியாக அவர்கள் நிஜாமுக்கு வருஷவாரியில் 9 லக்ஷ ரூபாய் கொடுப்பதுடன் வேண்டிய போது ராணுவ உதவியும் புரியவேண்டும். பழவேற்காடு, சதுரங்கபட்டணம், நாகபட்டணம் முதலிய இடங்கள் 1795-வது வருஷத்தில் டச்சுக்காரர்களிட மிருந்து பிடித்துக்கொள்ளப்பட்டன. 1792 வது வருஷத்திய உடன்படிக்கையின்படி, சேலம், மலையாளம், மதுரையின் திண்டுக்கல்

பாகம் முதலியன இவர்கள் வசப்பட்டன. 1799-வது வருஷத்தில் திப்புவின் ராஜ்ஜியத்தைப் பங்கிட்டுக்கொண்ட பொழுது இவர்களுக்குக் கோயமுத்தூர், கன்னடம் ஜில்லாக்கள் பாகமாகக் கிடைத்தன. தஞ்சாவூர் ராஜாவுக்கும் கர்னாடக நவாபுக்கும் மத்தியஸ்தராக இருந்ததால் அவர்களுக்குள் உடன்படிக்கை ஏற்பட 1778 வது வருஷத்தில் நாகூரும் இன்னும் 277 கிராமங்களும் கம்பெனிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டன. பராமத்துச் சேனை (Subsidiary Force) யின் பாதுகாப்புக்காக நிஜாமால் பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை ஜில்லாக்களை இங்கிலீஷ்காரர்கள் கொடுக்கப் பெற்றார்கள். கர்னாடக நவாபாகிய மகமதாலியால், அவர்களுக்கு ஒத்தாசை புரிந்ததற்காக அக்காலத்தில் ஜாகீரெனப்பட்ட செங்கற்பட்டுஜில்லா கொடுக்கப்பட்டது. 1792-ல் உண்டான உடன்படிக்கையின்படி வடசர்க்கார் பிரதேசத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையிலுமுள்ள இடங்கள் நவாபால் இங்கிலீஷ்காரர்களுக்கு விடப்பட்டன. அதில் நீக்கப்பட்டவை பிரெஞ்சுக்காரரிடமிருந்த புதுச்சேரி, காரைக்கால்; டச்சுக்காரரிடமிருந்த தரங்கம்பாடி இம் மூன்று ஊர்களுமே. 1838-ல் கர்நூல் கிடைத்தது. 1845-ல் டச்சுக்காரர்கள் தரங்கம்பாடியையும் விட்டுவிட்டனர். இவ்விஷயங்களை விவரமாய் அந்தந்த ஜில்லா சரித்திரத்தில் காணலாம்.


சென்னபட்டணம்
மைல் காட்டும் அளவு
குறிப்பு
5 டிவிஷன் பெயர்
எல்லை
ஆறு
கால்வாய்
முக்கியமான இடங்கள்
பைத்தியக்கார ஆஸ்பத்திரி
குஷ்டரோக ஆஸ்பத்திரி
தபால் ஆபீசு
கொத்தவால் சாவடி
மதராஸ் பாங்கி
ஹைகோர்ட்
1
2
3
4
5
6
7
9
10
11
12
13
14
15
17
18
19
20
21
23


மியூஸியம்
22
24
25
26
27
28
29
30
பார்த்தசாரதி
கோவில்
ராயப்பேட்டை
ஆஸ்பத்திரி
கபாலீஸ்வரர்
கோவில்
பக்கிங்காம் கால்வாய்
அடையாறு
அடையாறு
இஞ்சினீரிங் காலேஜ்
பிரஸிடென்ஸி காலேஜ்
பெயர்
1 இராயபுரம்
2 தண்டையார்பேட்டை
3 வண்ணாரப்பேட்டை
4 கொருக்குப்பேட்டை
5 ஹார்பர்
6 முத்தியாலுப்பேட்டை
7 கச்சாலீஸ்வரர்
8 கோத்தவால்சாவடி
9 அம்மன்கோயில்
10 ஏழுகிணறு
11 சாவுகார்பேட்டை
12 பெத்துநாயக்கன்பேட்டை
14 மைதானம்
19 வேப்பேரி
21 கீழ்பாக்கம்
22 நுங்கம்பாக்கம்
23 சிந்தாதிரிப்பேட்டை
25 சேப்பாக்கம்
26 திருவல்லிக்கேணி
27 அமீர்மஹால்
29 இராயப்பேட்டை
30 மைலாப்பூர்

அத்யாயம் — 1

தேச சரித்திரம்

சென்னை அல்லது சென்னப்பட்டணமென்ற இந்நகரம் சென்னை ராஜதானியின் பிரதான பட்டணம். இந்தியாவிலேயே இது மூன்றாவது பெரிய பட்டணம். ஒன்பது மைல் நீளமும், இரண்டு மைல் முதல் நான்கு மைல் அகலமும் வாய்ந்துள்ள இம் மாநகரம் (படம் 2.) சிதறுண்ட பாகங்களாக ஏற்பட்டிருக்கிறது. இருபத்து நான்கு சதுரமைல் விஸ்தீரணமுள்ள இந்நகரம் வங்காளக் குடாக்கடலின் கரை ஓரத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதன் வாயிலாக இரு நதிகள் ஓடுகின்றன. அவை காக்கை யிறகு போல் கரிய ஜலத்துடன் அசைந்து செல்லும் கூவம் நதி ஒன்று; அடையாறு மற்றொன்று. கூவம் நதி செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக் கருகில் தெற்கே சமுத்திர சங்கம மாகிறது. அடையாறோவெனில் இந்நகரின் தென் எல்லைக் கருகில் சமுத்திரத்தில் விழுகிறது. இவ் விரண்டு ஆறுகளிலும் போதுமான ஜல மிராததால் அவைகள் சுத்தமாக இருப்பதில்லை. மழைக் காலத்தைத் தவிர மற்றக் காலங்களில் இவை சமுத்திரத்திலிருந்து குறுகலான கரைகளால் பிரிக்கப்பட்டு ஆழமற்ற உளையுடன்கூடிய குளங்கள்போல் இருக்கக் காணலாம்.

இந் நகரத்தின் முக்கியமான பாகம் முன் பிளாக் டவுன் என்ற பெயர் வாய்ந்திருந்து இப்பொழுது ஜார்ஜ் டவுன் (George Town) என் றழைக்கப்பட்டு வருகிறது. இந்த பாகம்தான் வியாபாரத்திற்கு மத்திய ஸ்தானம். சென்னையின் மற்ற எப்பாகத்தைக் காட்டிலும் ஜனநெருக்க

முள்ள பாகம் திருவல்லிக்கேணி. இதில் முகம்மதியர்கள் அதிகம். முகம்மதியர்களது முக்கியமான விடுதியையும் அங்கே காணலாம். இதை ஜன நெருக்கத்தில் ஜார்ஜ் டவு-னுக்கு அடுத்ததாகச் சொல்லலாம். அதற் கடுத்தவை புரசை பாக்கமும் வேப்பேரியும் முறையே ஜன நெருக்கமுள்ள பாகங்கள். வேப்பேரியில் ஆங்கிலோ இந்தியர்களின் தொகை அதிகம். இவைக ளெல்லாம் இந் நகரின் மத்தியிலேயே ஏற்பட்டிருக்கினும் போதுமான திறந்த வெளிகளால் பிரிக் கப்பட் டிருக்கின்றன. இத் திறந்த வெளிகளில் கட்டடங்கள் ஒருபொழுதும் ஏற்படக் காரணமில்லை. மேற்கூறிய இடை வெளி மைதானங்களுள் முக்கியமானது "தீவு" (Island ground) என்னப்படும். இதில்தான் படைப்பயிற்சி முதலியன நடைபெறும். விளையாட்டுப் பூமியாகவும் இது உபயோகப் பட்டு வருகிறது. இதன் இரு பக்கங்களிலும் கூவம் நதியின் இரு கிளைகள் செல்கின்றன. கோட்டையைச் சுற்றித் துப்பாக்கி பீரங்கி சுடுவதற்காக ராணுவ அதிகாரிகளால் நிர்ணயித்து வைக்கப்பட்டுள்ள பெரிய மண்டலத்தின் ஒரு பாகமே இது. "பீப்பில்ஸ் பார்க்" (People's Park) என்ற இடம் அடுத்த விசேஷம் வாய்ந்த இடம். இது ஸர் சார்லஸ் டிரெவெலியன் (Sir Charles Trevelyan) என்பவர் கவர்ன ராக இருந்தபொழுது 1859-வது வருஷத்தில் ஏற்பட்டது. இங்கு செடி கொடி மரங்களால் சிங்காரமாயுள்ள பாகங்கள் இருப்பதுடன், காட்டுமிருகங்களின் காட்சியும் ஏற் படுத்தப்பட் டிருக்கிறது. நேப்பியர் பார்க் (Napier Park) என்றது இன்னொரு இடைவெளி. இது மௌண்டு ரோட் டுக்கும், சிந்தாத்திரிப் பேட்டைக்கும் இடையி லிருக்கிறது. இந்தச் சிங்காரத்தோட்டம் ஏற்பட்டதற்குக் காரண பூதமானவர் 1866-72 வருஷங்களில் சென்னை கவர்ன-

ராக ஏற்பட்டிருந்த லார்ட் நேப்பியர் (Lord Napier) என்பவர். ஜார்ஜ் டவுனுக்கு வடக்கில் ராபின்ஸன் பார்க் (Robinson Park) என்ற இன்னொரு சிங்காரத்தோட்ட இடைவெளி உண்டு. அது 1875-வது வருஷத்தில் ஸர் வில்லியம் ராபின்ஸன் என்ற கவர்னர் ஏற்படுத்தியது. மேற் கூறியுள்ள இடைவெளிப் பிராந்தியங்களைத் தவிர கவர்னர் மாளிகையை (Government House)ச் சேர்ந்த பெரிய தோட்டமும் வெளியும் இருக்கின்றன. கூவம் நதிக்குத் தெற்கில் சமுத்திரத்தைநோக்கிக் கட்டப்பட்டிருக்கும் அனேக பொதுக்கட்டடங்கள்(Public Buildings)மேற்கூறிய சமவெளியில்தான் ஏற்பட்டிருக்கின்றன. மனிதரது தேகத்தில் ஏற்படும் அசுத்தத்தை அகற்றுவது நுரைஈரல் அல்லவா? அதுபோலவே ஜனநெருக்கம் வாய்ந்த சென்னைமா நகரின் பற்பல பாகங்களில் ஏற்படும் அசுத்தத்தை அகற்ற மேற் கூறியுள்ள விசாலமான நந்தவனச் சமவெளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சுற்றிலுமுள்ள நகரின் ஓரத்தைப்பற்றியோவெனில் அதிக ஜன நெருக்கம் வாய்ந்த பாகம் ஜார்ஜ் டவுனுக்கு வடக்கில் உள்ளதே. அந்த பாகத்திலும் ஜன நெருக்கம் அதிகமாகிக்கொண்டே வரக் காரணம் உண்டு. ஏனெனில் அது வியாபார மும்மரம் வாய்ந்துள்ள பாகமாயிருக்கிறது.

இந் நகரில் முக்கியமான ஐரோப்பியர்களது இருப்பிடங்கள் (European Quarters) ஏற்பட்டிருப்பது நகரத்தின் எல்லையை ஒட்டிய பாகத்தின் மேற்கிலும், தெற்கிலும், எழும்பூரிலும், சேத்துப்பட்டிலும், கீழ்ப்பாக்கத்திலும், நுங்கம்பாக்கத்திலும், தேனாம்பேட்டையிலுமேயே. அடையாறு நதியின் வடகரையிலுள்ள துண்டு நிலத்திலும் ஐரோப்பியர்கள்விடுதிகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஈஸ்டு இந்தியா கம்பெனி உத்தியோகஸ்தர்களாலும், பிரபுக்களான வர்த்தகர்களாலும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சொந்த வியாபாரம் செய்துகொண்டுவந்த பதினெட்டாம் நூற்றூண்டின் இறுதியிலும் பத்தொன்பதாவது நூற்றூண்டின் ஆரம்பத்திலும், கட்டிமுடிக்கப்பட்ட நேர்த்தியான விடுதிகள் ஏற்பட்டிருப்பதும் இங்கேயே. அக் கட்டிடங்கள் எல்லாம் சுண்ணும்பு கொண்டு கட்டப்பட்ட செங்கல் கட்டிடங்களே. மேற்படி கட்டிடங்களில் ஒரு விசேஷம். ஸ்த்ரீக ளிருப்பதற்காகப் பிரத்தியேகமாக அந்தப்புரங்கள் அவற்றில்அமைக்கப்பட் டிருக்கக் காணலாம். அக்கட்டிடங்களில்,அக் காலத்திய ஜனங்களின் பழக்க வழக்கத்திற்கு அத்தகைய ஏற்பாடு இன்றியமையாததாக விருந்தது-போலும்.

இந் நகரின் முக்கால் பாகத்தில் அழகிய வீதிகள் ஏற்பட் டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது மௌண்ட் ரோட் (Mount Road). அது கோட்டையின் வாலாஜா வாயிற்படியி லிருந்து தீவின் குறுக்காகச் சென்று, கவர்ண்னர் மாளிகை (Government House), மெட்ராஸ் கிளப் (Madras Club), செயிண்ட் ஜார்ஜ் கதீடிரெல் (St. George Cathedral), ஹார்ட்டிகல்சரல் கார்டன் என்ற பூந்தோட்டம் (Horticultural Garden) முதலிய விடங்களைக் கடந்து, பிறகு அடையாறு பாலத்தின் வழியாக நீளக் குளக்கரையின் பக்கமாகச் செல்கிறது. அது கிண்டியிலுள்ள கவர்னரது நாட்டுப்புர பங்களாவுக்கும் கோட்டைக்கும் ஒன்பதுமைல் தூரத்திலுள்ள பரங்கிமலைக்கும் (St. Thomas' Mount) போகக்கூடிய பாதை. இதற்கிணையாக மோப்ரேஸ் ரோட் (Mowbrays' Road) என்ற பாதை இரு பக்கங்களிலும் ஆலமரங்க ளடர்ந்து நிழலுடன் அழகாக விளங்கும். இது

அடையார் கிளப்பிற்குச் செல்கிறது. அடையார் கிளப்பைக் கட்டி முடித்தவர் முதலாவது அக்கவுண்டெண்ட் ஜெனரல் (Accountant-General) மோப்ரே என்றவர். மேற்கூறியுள்ள மோப்ரேஸ் ரோட்டில் செயிண்ட் ஜார்ஜ கதிடிரெல் என்ற விடத்தில்,கதிடிரெல் ரோட் (Cathedral Road) என்ற ரஸ்தாவும், நுங்கம்பாக்கம் ஹைரோட் (Nungambakam High Road) என்ற ரஸ்தாவும் கடந்து செல்கின்றன. மேற் கூறிய இரு பாதைகளில் நுங்கம்பாக்கம் ஹைரோட், பூந்தமல்லி ரஸ்தாவிலுள்ள நாகரீகம் வாய்ந்துள்ள விடுதிகளுக்குச் செல்ல, கதிடிரெல் ரோட் என்ற பாதை கிழக்காக மெரீனு (Marina) என்று வழங்கும் கடற் கரைக்குப் போகிறது. இந்த மரீனு என்ற ரஸ்தா, ஸர். எம். இ. கிராண்ட் டப் (Sir M. E. Grant Duff) கவர்னராக இருந்த காலத்தில் ஏற்பட்டது. அது ஹைகோர்ட்டிலிருந்து சமுத்திரக் கரை நெடுக ஸாந்தோம் (San Thome) வரை செல்கிறது.

சென்னைமா நகரில் முக்கியமானது ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை (Fort St. George). இது பிரான்ஸிஸ் டே (Francis Day) என்றவரால் 1640-வது வருஷம் பிப்ரவரி மாதத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. முதல்முதல் அது மதில் சுவரால் சூழப்பட்ட ஒரு பண்டகசாலையாயும் இன்னும் சில கட்டிடங்களாயுமே இருந்தது. தவிரவும் இங்கு நான்கு அரண்களும் ஏற்பட்டிருந்தன. எல்லாம் கூடி நூறு கஜ சதுரம் வாய்ந்துள்ளதாக இருந்ததே ஒழிய வேறில்லை. 1643-வது வருஷத்தில் 100 பெயர்க ளடங்கிய ராணுவப் படை இங்கு வைக்கப்பட்டது. பிறகு சில வருடங்களுக் கெல்லாம் அத்தொகையும் 26 வீரர்களாகக் குறைக்கப்பட்டது. இக் கோட்டையைச் சுற்றி வெள்ளையர் புரி

(White Town) என்ற ஊர் படிப்படியாக ஏற்பட்டு நாளடை வில் அதற்கு மதிற் சுவர்களும் அரண்களும் ஏற்பட்டன. அது அப்பொழுது கிழக்கு மேற்கில் சுமார் 600 கஜ மிரு-ந்தது. அடுத்து வடக்கில் இப்பொழுது லைட் அவுஸ் எஸ்பிளனேட் (Light - house Esplanade) என்னு மிடத் தில் கறுப்பர்கள் ஊர் (Black Town) என்ற பாகம் ஏற்பட்டது. இதைச் சுற்றிலும் கூட மதில் சுவர்கள் ஏற் பட்டன. 1670-1680 வருஷங்களுக் கிடையில் இதன் ஸ்தி-தியை விருத்திசெய்து பலப்படுத்தவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. கடல் ஆக்கிரமித்து வந்துகொண்டும் போய்க் கொண்டு மிருந்ததனால் இடத்தைப் பந்தோபஸ்து செய்து கொள்ளவேண்டிய அவசியம் வ்ந்ததுடன் ஸான்தோமில் இருந்த பிரெஞ்சுக்காரர்க ளிடமிருந்து பயமும், சிவாஜி அவர்களை நோக்கிவந்து எதிர்க்கக்கூடும் என்ற பயமும் அவர் களுக்கு ஏற்பட்டன. இந்தியாவில் முதல் முதல் இங்கிலீஷ் காரர்களது மாதா கோவில் 1678-வது வருஷத்தில் சென்னை யில் ஆரம்பித்து 1680-வது வருஷத்தில் முடிக்கப்பட்டது. அது ஸெயிண்ட் மேரி மாதாகோவில். நவாப் டாவுத்கான் (Davud Khan) என்றவரால் 1702-வது வருஷத்தில் இக்-கோட்டை மூன்று மாத காலம் முற்றுகை போடப்பட்-டிருந்தது. 1740-வது வருஷத்தில் ஜோஸெப் ஸ்மித் என்ற எஞ்சினியர் கோட்டை எதிர்க்கப்பட்டால் பாதுகாத் துக் கொள்ளக்கூடிய ஒரு உபாயம் நிர்ணயித்துக் கூறி னார். மதில் சுவர்களுக் குள்ளிருந்த இடத்தின் விஸ்தீர் ணத்தை இரட்டிப்பாக்க வேண்டு மென்றது அவரது அபிப்பிராயம். ஆனால் அவரது யோசனை அனுபவத் திற்கு வரவில்லை. 1746-வது வருஷத்தில் பிரெஞ்சு கவர் னர் லபோர்டனே என்றவர் அதை எதிர்த்து அதிக கால

தாமதமின்றிப் பீரங்கிவெடி தாக்கி அதைப் பிடித்துக்கொண்டார். மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் மறுபடியும் இக் கோட்டைக்குள் சென்றபொழுது இது அதிகமான யாதொரு மாறுபாட்டையும் அடைந்திருக்கவில்லை. ஏற்பட்டிருந்த மாறுபாடெல்லாம் வடக்-குப் பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலும் கோட்டைச் சரிவு ஏற்படுத்தப்பட்டிருந்ததே. பிளாக் டவுன் (Black Town) பாதி நாசமாயிருந்தது. கோட்டை பெரிதாக்கப்படவேண்-டிய வேலையைப் பூர்த்திசெய்யப் பிரக்கியாதிபெற்ற எஞ்சினி-யர் ஜெனரல் பெஞ்சமின் ராபின்ஸ் (Benjamin Robins) என்றவர் ஏற்படுத்தப்பட்டார். அவர் ஸ்மித்தினது ஏற்பாட்டை அனுசரித்தபோதிலும் 1752-வது வருஷத்தில் வேலை பூர்த்தியாகு முன்னரே இறந்துபோய் விட்டார். ஆதலால் அவர்தொடங்கிய வேலை மெஸ்ஸர்ஸ் ப்ரோஹியர் அண்டு கால் (Messrs. Brohier & Call) என்ற கம்பெனியால் எடுத்துக்கொண்டு நடத்திவரப் பட்டது. 1755ம் வரு-ஷத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருஷ காலம் நாலாயிரம் வேலைக்காரர்கள் இடைவிடாது வேலைசெய்து கொண்டு வந்தார்கள். கூவம் நதி ஓடிய திசையிலிருந்து வேறு பக்கமாக ஓடும்படி திருப்பப்பட்டது. முன் அது ஓடிக்கொண்டிருந்த விடம் தூர்த்துவிடப்பட்டது. கோட்-டையின் தெற்குச் சுவர் நதி தூர்க்கப்பட்ட பாகத்தின் வழியாக நிகளம் அதிகரித்துக் கட்டப்பட்டது. புதிய மூன்று கொத்தளங்கள் தீவின் ஒரு பாகமாக விருந்த விடத்தில் கட்டப்பட்டதுமன்றி அவை மறைப்புச் சுவர்களாலும் சேர்க்கப்பட்டன. மேற்கூறியுள்ளதிலிருந்து முன் நாற்கோணமாக ஏற்பட்டிருந்த கோட்டை இப்பொழுது பாதி தசகோணம் வாய்ந்ததாக ஏற்பட்டது புலப்படும். இதன்

தொண்டைக்கு உவமானமாகக் கூறக்கூடிய பாகம் சமுத்திரத்தை நோக்கி மூடப்பட்டு, உட்பாகம் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டது. 1758-வது வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்கள் கௌண்ட் லாலி (Count Lally)யின் கீழ்ப் படையெடுத்து வந்தபொழுது இந்த இடம் முற்றிலும் திருப்தியுள்ளதாக ஏற்பட்டிராவிடினும் பிகெட், லாரென்ஸ் (Pigot and Lawrence) என்றவர்கள் இதைச் சத்துருக்களது கைப் படாமல் பாதுகாக்கப் போதுமான பந்தோபஸ்துள்ளதாக இருந்தது. முற்றுகை ஆரம்பமான உட-னேயே பழைய "பிளாக் டவுன்" என்ற பாகம் பீரங்கிகள் ஏற்றிச் சுடச் சௌகரியமாக விருக்க, அது இடித்து நிர்மூலமாக்கப்பட்டது. சுற்றியிருந்த முத்தியால் பேட்டையும் பெத்துநாயக்கன் பேட்டையும் பிளாக் டவுனில் இருந்த கறுப்பு மனிதர்கள் வஸதிகளாகக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டுவிட்டன. இவைகளுக்கு வடக்கு முகத்திலும் தெற்கு முகத்திலும் 1769-வது வருஷத்தில் மதில் சுவர்கள் ஏற்பட்டன. இதற்குள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் பாதுகாப்பிற்காக வேண்டிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வந்தன. மேஜர் கால் என்றவரும், கர்னல் ராஸ் என்றவரும் 1787-வது வருஷம் வரை வேலை செய்வதை மேற் பார்வை செய்துகொண்டுவர, 1787-வது வருஷத்தில் இப்பொழுது கோட்டை யிருக்கும் ஸ்திதிக்குக் கட்டி முடிவு செய்யப்பட்டது. அனேகமாக எல்லா கவர்ண்மெண்டு ஆபீசுகளும் இருப்பது கோட்டைக்குள்ளேயே. செக்ர-டேரியட் ஆபீசென்ன, கவுன்சில் சேம்பர் என்ற சட்ட சபைக் கட்டடமென்ன, ராணுவத் தலைமை இடமென்ன, ஆயுதசாலை யென்ன, போர்ச் சேவகர்கள் விடுதியென்ன இவையெல்லாமே கோட்டைக்குள் இருக்கின்றன. சென்னை

ராணுவம் போரில் வெற்றி பெற்றதற்கு அறிகுறியாகச் சத்துருக்களிடமிருந்து பறித்துக் கொண்டுவரப்பட்டிருந்த சாமான்களெல்லாம் இக் கோட்டையிலுள்ள ஆயுத சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள செயிண்ட் மேரி மாதாகோவிலில் பாதிரியார் ஷ்வார்ட்ஸ் (Schwartz), என்றவரும், ஸர் தாமஸ் மன்ரோ, (Sir Thomas Munro), ஸர் ஹென்ரி வார்டு (Sir Henry Ward), பிகெட் பிரபு (Lord Pigot), ஹோபர்ட் பிரபு (Lord Hobart) முதலானவர்களும் புதைக்கப்பட்டிருக்கும் கல்லறைகள் இருக்கின்றன. தற்காலத்திய சட்டக் கல்லூரி (Law College) கட்டப்பட்டிருக்குமிடத்திலிருந்த பழைய இடுகாட்டிலிருந்த கல்லறையின் கற்கள் இரண்டொன்று தவிரப் பாக்கியெல்லாம் 1758-59-வது வருஷத்திய முற்றுகைக்குப் பிறகு செயிண்ட் மேரி மாதாகோவிலுக்கு மாற்றப்பட்டன. இப்பொழுது அவைகளெல்லாம் கட்டிடத்தைச் சுற்றிய தளவரிசைக்கு உபயோகப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். முந்திய இடத்திலேயே இருக்கும்படி விடப்பட்டிருந்து இப்பொழுதும் அங்கேயே இருக்கும் இரு கல்லறைகளின் கற்கள், ஐக்கிய மாகாணத்தின் கவர்னராக விருந்து, ஏல் காலேஜ் என்ற கல்லூரிக்கு அஸ்திவாரம் போட்டதாகக் கூறப்பட்டுள்ள ஏல் துரையினது குமாரர் எலிஹு ஏல் (Elihu Yale) என்றவரது சவக் குழியின் மேலுள்ளதும், ஸிவில் ஸெர்விஸ் வேலையிலிருந்த பௌனி (Powney) என்றவரது சவக் குழியின்மேலிருந்ததுமே.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கவர்னரது மந்திராலோசனை சபை (Council Chamber) 1910-வது வருஷத்திற்கு முன், தற்காலத்திய செக்ரட்டேரியட் கட்டிடங்களிலுள்ள ஓர் அறையில் கூட்டப்பட்டு வந்தது. அவ்வருஷத்தில் சட்ட

சபை பெரிதாக்கப் பட்டதிலிருந்து புதிதாக ஒரு ஆலோசனை சபை கூடுமிடம் ஏற்படுத்தப்படவேண்டியது அவசியமாக ஏற்பட்டது. ஆதலால் தற்காலத்திய கட்டிடம் செக்ரடேரியட் கட்டிடத்தின் கீழ்ப்பக்கத்தில் கட்டிமுடிக்கப் பட்டது. மேற்கூறிய சபை இன்னும் பெரிதாக்கப்பட்டதால் 1920-வது வருஷத்தில் 1910-வது வருஷத்தில் கட்டி முடிவு பெற்ற கட்டிடத்தின் மேல், இரண்டாவது மெத்தை கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டிடத்திலுள்ள கறுப்புத்தூண்கள் சரித்திர சம்பந்தமான விசேஷம் வாய்ந்துள்ளவை. பதினெட்டாவது நூற்றாண்டின் முப்பதாவது நாற்பதாவது வருஷங்களுக்கிடையில் பிட் (Pitt) என்ற கவர்னர் கோட்டையின் சதுரத்திலிருந்து சமுத்திர வாசற்படி வரை ஒரு அழகிய மண்டபம் கட்டி முடிவுசெய்தார். இது மேல் பாகம் மூடப்பட் டிருப்பதுமன்றி, 32-தூண்கள் வரிசை அடங்கியதாகவும் ஏற்பட்டிருக்கிறது. மேற்கூறிய தூண்கள் பல்லாவரம் கறுப்பு ஜாதிக் கல் தூண்கள். 1746-வது வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்கள் சென்னையைப் பிடித்துக் கொண்டபொழுது அவர்கள் இத்தூண்களைப் புதுச்சேரிக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு அவை 1761-வது வருஷம் வரையில் இருந்தன. அவ்வருஷத்தில் பிரிடிஷ்காரர்கள் அந்த இடத்தை முற்றுகைசெய்து எதிர்த்து அத் தூண்களைத் திரும்பவும் பிட் மண்டபத்திற்கே கொண்டுபோய் முன்னிருந்தபடி வைத்துவிட்டார்கள். இத்தூண்களில் நன்கு பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தவை 1910-வது வருஷத்தில் ஏற்பட்ட புதிய மந்திராலோசனை சபைக்கு உபயோகப்படுத்தப்பட்டு, இப்பொழுதிருக்கும் கட்டிடத்தில் இருக்கும்படி விடப்பட்டிருக்கின்றன. இந்த மந்திராலோசனை சபையில் அலங்காரமாக உள்ளவைகளில் மிகவும் பிரசித்த

மானவைகள் (1) சென்னை கவர்னர் வில்லிங்டன்பிரபு இனாமாக அளித்த தலைவர் நாற்காலி (Speaker's chair). (2) மாட்சிமை பொருந்திய ஐந்தாவது ஜார்ஜ் மன்னரது மேலுருப்புப் பிரதிமை. இது லோக்கல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் (Local Self Government) மந்திரியாகிய பனகல் ராஜாவினால் இனாமாக அளிக்கப்பட்டது. (3) இந்தியா மந்திரி (Secretary of State) யாகவிருந்த கனம் எட்வின் மாண்டேகுவின் மேலுருப்புப் பிரதிமை. இது அக்கனவானது குணாதிசயங்களைச் சிலாகிக்கும் சில பிரபுக்களால் அவரது இந்திய ஆட்சிச் சீர்திருத்த விஷயமாக அவர் பாடுபட்டதை அங்கீகரிப்பதற்கு அறிகுறியாக ஏற்படுத்தி வைக்கப்பட்டது.

இந்த ராஜாதானி சென்னை கவர்னராலும் அவருக்குத் துணையாக ஏற்பட்டுள்ள நான்கு அங்கத்தினர் (Members) களும், மூன்று மந்திரிகளும் அடங்கிய மந்திராலோசனை சபையாலும் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. மெம்பர்கள் என்னும் அங்கத்தினர்கள் ரெவினியூ மெம்பர் (Revenue Member) என்றும், ஸ்தல மெம்பர் (Home Member) என்றும், சட்ட மெம்பர் (Law Member) என்றும், அரசிறை மெம்பர் (Finance Member) என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். மந்திரிகள் சுயஆட்சி (லோகல் செல்ப் கவர்ன்மெண்ட்) (Local Self Government) மந்திரி யென்றும், வித்தியா மராமத்து இலாகாக்களின் (Education & Public Works) மந்திரியென்றும், அபிவிர்த்தி (Development) மந்திரி யென்றும் ஏற்படுத்திவைக்கப்பட் டிருக்கிறார்கள். மந்திரிகளுக்கு அரசாட்சியில் மேலே குறிப்பிட்டுள்ள இலாக்காக்களில் சர்க்கார் அநுமதியில்லாமலே அவர்களுக்கு நல்லதென்று தோன்றும் மாறுதலைச் செய்ய அதிகாரம் உண்டு.

1919-வது வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டின்படி 17-12-1920ல் ஏற்பட்ட முதல் சட்டசபை 1923–24வது வருஷத்தில் (17-9-1923) முடிவுபெற்றது. இச்சபை கலையுமுன் இதனுல் அங்கீகரிக்கப்பட்ட சட்டசம்பந்தமான விஷயங்களில் சேர்ந்துள்ளவை சென்னை நில அளவை, எல்லைப்பொழி முதலியவைகளின் சம்பந்தமான மசோதா, சென்னை யூனிவெர்ஸிட்டி மசோதா, கைத்தொழில் விஷயமாகச் சர்க்கார் உதவியைப் பற்றிய மசோதா, சென்னை முத்திரைக் காகிதத்தைப்பற்றிய மசோதாவில் (Stamp Act) சீர்திருத்தம் முதலியன. ஜனவரி மாதத்தில் நீர்ப்பாய்ச்சல் சட்டம் (Irrigation Bill) ஒன்று கொண்டுவரப்பட்டது. அதன் நோக்கம் நீர்ப்பாய்ச்சல் விஷயமாக சர்க்காரது நிலைமை இன்னதுதான் என்று நிர்ணயித்துத் தெளிவாய் வரையறுக்க வேண்டும் என்றது. ஆனுல் அச் சட்டம் பலரால் ஒப்புக்கொள்ளத்தக்கதாக ஏற்படாததால் அதை மந்திராலோசனை சபையின் முன் கொண்டுவர அநுமதி அளிக்க மறுக்கப்பட்டது. ஜில்லா முனிஸிபாலிடி, லோகல் போர்டு மசோதாக்களைச் சீர்திருத்த இரண்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகளை, ஆலோசனை செய்து அபிப்பிராயம் கொடுக்கக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனுல் சட்டசபை அதிகார காலம் தீர்ந்து கலையுமுன் மேற்கூறிய கமிட்டிகளின் அபிப்பிராயம் வெளியிடப்படவில்லை. சட்டசபையோர்களுக்குள்ளும், அச்சபையின் வெளியில் இருப்பவர்களுக்குள்ளும் அதிகமான மனக் குழப்பத்தை உண்டாக்கிய சட்டம் (Hindu Religious Endowments Bill) ஹிந்துக்களது மதத்தின்படி ஏற்பட்ட மானியங்கள் முதலான சொத்துக்களைப்பற்றிய தர்மஸ்தாபன சட்டம். இதன் நோக்கம் சென்னை ராஜதானி சம்பந்தப்பட்ட வரை

1863-வது வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் இரு-பதாவது மசோதாவை அதிக்கிரமிக்க அதாவது உபயோகப் படாமல் செய்யவேண்டும் என்பதே. இந்த ராஜதானியின் தர்ம கைங்கரியச் சொத்துக்களைத் திறமையாக நிர்வகிக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்பதே இம் மசோதாவின் நோக்கம். இம் மசோதாவின் விசேஷமான விஷயம், ஒரு பிரத்தியேகமான சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதனால் ஒழுங்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளைக்கொண்டு பொதுதர்ம கைங்கரிய சொத்துக்களின் வரவு செலவு முதலியவைகளை மேற்பார்வைசெய்து சரிவர நடத்திவர வேண்டிய தென்பதே. இந்த ராஜதானியிலுள்ள அனேக ஜனங்களுக்கு இந்த மசோதாவில் ஆக்ஷேபனை ஏற்பட்டது. மாஜர் மூலமாகவும், தக்க பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அவர்களைக் கொண்டும் சென்னை கவர்னருக்குத் தங்களது ஆக்ஷேபனையைத் தெரிவித்தார்கள். மேற்கூறிய மசோதா சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் கவர்னர் அவர்கள் வைஸிராய் (Viceroy) என்னும் ராஜப்பிரதிநிதியுடன் கலந்து ஆலோசனைசெய்து மேற்படி மசோதாவைச் சட்ட சபையார் மறுபடியும் அதில் சிற்சில பாகங்களைப்பற்றி ஆலோசிக்குமாறு கூறித் திரும்பவும் அச் சபையின்முன் கொண்டுவர ஏற்பாடுசெய்தார்.

புதிய சட்டசபை ஏற்பட அக்டோபர் மாதம் கடைசி தினத்தில் அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கவேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன. அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப் படுவதில் ஜனங்களுக்கு ஊக்கம் அதிகம் ஏற்பட்டது. ஏனெனில் மந்திரிக் கக்ஷிக்கு எதிரிகளென்ன, பிராம்ஹணர்கள் அல்லாதவர்கள் என்ன, ஸ்வராஜியக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் என்ன, இன்னும் பற்பல கட்சியார்கள் ஒவ்வொருவ

ரும். தங்கள் தங்கள் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுத்தனுப்பப் பாடுபட்டார்கள். மேற்கூறிய அங்கத்தினர்கள் தெரிந்தெடுத்ததில் மும்மூலைப் போட்டி சாதாரணமாகச் சில இடங்களில் ஏற்பட்டது. ஒரு பகுதியிலிருந்து இரண்டு அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கவேண்டியிருந்தது. அதற்கு எட்டுப் பெயர்கள் போட்டியாக ஏற்பட்டிருந்தார்கள். கடைசியாக மந்திரிக் கக்ஷியைச் சேர்ந்த அங்கத்தினர்களே ஜாஸ்தியாகத் தெரிந்தெடுத்தனுப்பப்பட்டிருந்தார்கள். இவர்களிலிருந்து மூன்று பெயர்களை கவர்னர் மந்திரிகளாக நியமித்தார். அம்மூவர்களில் இரண்டு பெயர்கள் முந்திய சபையில் இருந்து வேலைபார்த்திருந்தவர்கள். அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க லாயக்குள்ளவர்களில் பெரும்பான்மையோர் சென்று தாங்கள் சரியானவர்களென்று கருதிய அங்கத்தினர்களுக்கு நியமனச் சீட்டு (Vote) போட்டுத் திரும்பினார்கள்.

பைனான்ஸ் கமிட்டி (Finance Committee) என்ற அரசிறைக் கமிட்டியும், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி (Public Accounts Committee) என்ற பொது வரவு செலவுக் கமிட்டியும் மேற்கூறியுள்ள சட்டசபையின் முக்கியமான நிரந்தர காரிய நிர்வாக சபைகளாக இருந்துவந்தன. மந்திராலோசனை (Advisory) சபைகளின் தொகை ஒன்று அதிகமாக்கப்பட்டது. எப்படியென்றால் தாழ்ந்த ஜாதிகளது (Depressed Classes) பாத்தியதை முதலானவைகளை எடுத்துக் கூற ஒருசபை ஏற்படுத்தப்பட்டு வருஷக் கடைசியில் முந்திய சபைகளுடன் சேர்க்கப்பட்டது. கொண்டுவரப்பட்ட தீர்மானம் செய்யப்படவேண்டிய விஷயங்களில் எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள் 182. அவைகளுள் 47 தீர்த்துவிடப்பட்டன.

அத்யாயம்—2.

விசேஷ இடங்கள்

சென்னை யூனிவர்ஸிட்டி: (Madras University):—சென்னை யூனிவர்சிட்டி 1857-ம்வருஷம் செப்டெம்பர்மாதம் 5-ம் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. அப்படி ஸ்தாபிக்கப் படுமுன் சட்டசபையில் ஒப்புக்கொள்ளப்பட்டு, கவர்னர் ஜெனராலாலும் சம்மதிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இச்சபை அதற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் கல்லூரி, கலா-சாலைகளின் மாணவர்களைப் பரீக்ஷை செய்வதற்கென்றே ஏற்பட்டிருந்தது. அக்காலத்திய லண்டன் யூனிவர்ஸிட்டியின்

மாதிரியை அநுசரித்து ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. 1902-வது வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்-படுத்தப்பட்ட கமிஷன் யூனிவர்ஸிட்டியின் வேலையைப் பரிசோதனைசெய்து, 1904-வது வருஷத்திய யுனிவர்ஸிட்டிச்

சட்டத்தை ஏற்படுத்தக் காரணமாயிற்று. அச் சட்டம் ஏற்படுத்தப்பட்டதும் யூனிவர்ஸிட்டியின் ஆட்சியைச் சீர்திருத்தி அதன் வேலையை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடனேயே, யூனிவர்ஸிட்டி போதனு விஷயங்களிலும் யூனிவர்ஸிட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட கல்லூரி கலாசாலைகளை மேற்பார்வை செய்வதிலும் இச்சங்கத்தின் வேலை அதிகரிக்கப்படவேண்டுமென்றது அச்சட்டத்தின் நோக்கம். மேற்கூறிய சட்டத்தை அநுசரித்து இந்த யூனிவெர்ஸிட்டியின் ஆட்சி, சென்னை கவர்னர் சான்ஸலராக ஏற்படுத்தப்பட்டு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. வைஸ்-சான்ஸலர், சான்ஸல ராலும், ஸெனட் என்ற சபையாராலும் தெரிந்தெடுக்கப்படவேண்டும். இந்த செனட் சபை சான்ஸலரால் தெரிந்தெடுக்கப்பட்ட 80 அங்கத்தினர்களும் (Fellows), கல்லூரி காரியஸ்தர்களால் (Faculties) தெரிந்தெடுக்கப்பட்ட 10 அங்கத்தினர்களும், (Fellows) சென்னை யூனிவர்ஸிட்டியில் ரிஜிஸ்தர் செய்யப்பெற்ற கல்லூரி யோக்கியதா பத்திரிகை பெற்ற (Graduates) வர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட 10 அங்கத்தினர்களும் அடங்கியுள்ளது. இந்த ஸெனட் யூனிவர்ஸிட்டியின் ஜனஸமூகம் எனக் கூறலாம். விஷயங்களை அமுலுக்குக் கொண்டுவரும் வேலை ஸிண்டிகேட் (Syndicate) என்ற சங்கத்தைச் சேர்ந்தது. இந்த ஸிண்டிகேட் என்ற சங்கம், ஸெனட் சபையாலேயே அதன் அங்கத்தினர்களிலிருந்து தெரிந் தெடுத்து ஏற்படுத்தப்பட வேண்டும். செ ன் னை யூனிவர்ஸிட்டி, ராஜதானியிலுள்ள உயர்தரக் கலாசாலைகளின் மீதாவது, அவைகளின் போதனு முறைகளிலாவது நேரான யாதொரு அதிகாரமும் பெற்றிருக்கவில்லை. ஆனல் வித்தியா இலாகாவின் கீழுள்ள உயர்

தரக் கலாசாலைகளை யூனிவர்ஸிட்டி விஷயங்களுக்கு ஒப்புக்கொண்டிருக்கிறது. உயர் தரக் கலாசாலைகளின் படிப்புமுடிந்த பிறகுதான் கல்லூரி அதாவது யூனிவெர்ஸிட்டிப் படிப்பு ஆரம்பிக்கவேண்டும். யூனிவர்ஸிட்டி யோக்கியதா பத்திரம் பெற உயர் தரக் கலாசாலைப் படிப்பு முடிந்ததும், கல்லூரிகளில் இரண்டு வருஷம் படித்து இன்டர்மீடியட் (Intermediate) என்ற ஒரு யூனிவெர்ஸிடிப் பரீட்சைக்ஷயிலும் பிறகு இரண்டு வருஷம் படித்து பி. ஏ., (B. A.) என்ற பரீக்ஷையிலும் தேறவேண்டும். மேற்கூறிய யூனிவர்ஸிட்டி யோக்கியதா பத்திரம் பெற்றபிறகேதான் இதர தொழிற் கல்வி யோக்கியதா பத்திரம் யூனிவெர்ஸிட்டியிலிருந்து பெற முயற்சி செய்ய யோக்கியதை ஏற்படும். சென்னையில் மூன்று முதல்தரக் கல்லூரிகளும், ஒரு இரண்டாந்தரக் கல்லூரியும், ஒரு ஸ்திரீகள் கல்லூரியும், ஒரு வைத்தியக் கல்லூரியும், ஒரு சட்டக் கல்லூரியும், ஒரு எஞ்சினியர்கள் கல்லூரியும் உண்டு.

கிண்டியிலுள்ள சிற்பக் கல்லூரி (Engineering College) ஆரம்பத்தில் 1794-ல் ஒரு சர்வே கலாசாலையாக விருந்து பிறகு சிற்பக் கல்லூரியாக ஏற்பட்டு சென்னை சேப்பாக்கத்திலிருந்து கிண்டிக்கு மாற்றப்பெற்றது.

சென்னையில் வித்தியாசாலைகள் வைத்தியக் கல்லூரிகள் முதலியன ஏற்பட்டிருப்பதுடன் அனேகம் சாஸ்திரீய, தர்ம, பொதுஜன சாலைகளும், சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் சாஸ்திரீய சம்பந்தமானவைகளுள் முக்கியமானவைகள் இரண்டு; அவை: (1) தூரதிருஷ்டிக் கண்ணாடி வைத்துச் சுடர்களைப் பார்த்தறியும் நக்ஷத்திர சாலை (Observatory), (2) விநோதமான வஸ்துக்கள் வைத்திருக்கும் கண்காட்சிச் சாலை (Museum).

நக்ஷத்திர சாலை (Observatory):—இது முதல்முதல் கீழ்நாடுகளில் ஐரோப்பியர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. சென்னையில் வில்லியம் பீட்ரி (William Petrie) என்றவர் சபையின் அங்கத்தினராக ஏற்பட்டிருந்தபொழுது தான் சேர்த்துவைத்திருந்த சாஸ்திரீயப் பரிசோதனைக் கருவிகளை (Scientific Instruments)த் தான் இந்தியாவைவிட்டுப் போகும்பொழுது 1787-வது வருஷத்தில் பொது நன்மைக்காக இனாமாகக் கொடுத்துவிட்டுப்போனதே இது ஸ்தாபனமானதற்கு மூலம். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கட்டிடம் 1792-வது வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டது. அக்காலத்தில் இத்தகைய விஷயங்களில் மிகவும் ஊக்கம் வாய்ந்திருந்தவர் கவர்னர் ஸர் சார்லஸ் ஓக்லி என்றவர். முதல் வானசாஸ்திரியாக ஏற்பட்டவர் ஜான் கோல்டிங்காம் (John Goldingham) என்றவர். அவர் 1830-வது வருஷம் வரையில் வேலையில் அமர்ந்திருந்தார். அவரும், அவருக்குப் பிந்தி வந்தவர்களும், முக்கியமாய் டி. ஜி. டெயிலர், பம்பாயில் எஞ்சினியராக இருந்த டப்லியூ, எஸ். ஜாகோப், என். ஆர். போக்ஸன் என்னும் இவர்களும் வானசாஸ்திர ஆராய்ச்சி விஷயமாகப் பாடுபட்டு உழைத்துளர். மேற்கூறியுள்ள நக்ஷத்திர சாலையிலிருக்கும் கருவிகளுள் ஒரு பெரிய நிரக்ஷாரத்திற்குரிய (Equatorial) கருவியும், சிலாக்கியமான கிரகண வட்டமும் (Transit circle) முக்கியமானவைகள். இதில் சேர்ந்த அந்தரிக்ஷ (வான) இலாகா 1867-வது வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இந்தியா கவர்ண்மெண்டாரின் கீழ் 1874-வது வருஷம் கொண்டுவரப்பட்டது. 1899-வது வருஷத்தில் சென்னை நக்ஷத்திர சாலை இந்தியா கவர்ண்மெண்டாரின் கீழ்மாற்றப்பட்டது. அப்பொழுதிருந்த வானசாஸ்திரி சென்னையிலும், கோ-

டைக் கானலிலு மிருந்த நக்ஷத்திரசாலைகளை மேற்பார்வை செய்து பார்த்துவர டைரக்டர் ஆப் ஆப்ஸெர்வேட்டரீஸ் (Director of Observatories) என்ற வேலையில் நியமிக்கப்பெற்றார். சென்னை நக்ஷத்திரசாலை ஒரு டெபுட்டி டைரக்டரின் (Deputy Director) கீழ் வைக்கப்பட்டது. அவரே சென்னை கவர்ண்மெண்டாருக்கு (Meteorological Reporter) அந்தரிக்ஷ விஷயங்களைப்பற்றிக் கூற-வேண்டியவர்.

சென்னை நக்ஷத்திரசாலையின் தற்காலத்திய வேலை காலத்தை நிர்ணயிக்க மத்தியரேகை சம்பந்தப் பரீக்ஷை செய்து வருவதும், கால நிர்ணயம் செய்து கணக்குவைத்துப் பிரதி தினமும் சென்னை மத்திய தந்தி ஆபீசுக்கு சமாசாரம் அனுப்பி அதன் மூலமாக இந்தியா முழுவதுக்குமே தெரிவிப்பது. சரியானகாலம் நான்குமணி ஆகும்பொழுது சென்னையில் மாத்திர மல்லாமல் இந்தியாவில் பல இடங்களிலும், அக்காலத்தை நிர்ணயித்துக் காட்டத் தானாகவே குறிகள் ஏற்பட ஏற்பாடு செய்யப்பட்டுளது. தவிரவும் பரீக்ஷைசெய்து கொண்டுவந்து புயல்காற்று முதலியவைகளைப்பற்றி எச்சரிக்கும் வேலையையும், ராஜதானியின் சீதோஷ்ண நிலைமையைப்பற்றிய விவரத்தையும், .பற்பல இடங்களிலிருந்து தந்தி மூலமாக வரும் செய்திகளைக் கொண்டு கோர்வையாகச் செய்து பிரசுரிக்கும் வேலையை இந்த நக்ஷத்திரசாலை செய்துவரும்.

விநோதப் பொருட்காட்சி சாலை மியூஸியம் (Museum): இது 1851-வது வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஆரம்பம் சென்னை லிட்டரெரிஸொஸைடி (Madras Literary Society), இனுமாக அளித்த மண், கல் முதலியவைகளின் அமைப்பைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்

மாதிரிப் பொருள்களே. தவிர, 1851-வது வருஷத்தில் இங்கிலாந்தில் ஹைட்பார்க் என்னு மிடத்தில் ஏற்பட்ட பெரிய கண்காட்சியில் இரட்டிப்பாக ஏற்பட்ட சாமான்க-



ளில் ஒவ்வொன்று அனுப்பப்பட்டவை இந்த மியூஸியம் ஏற்பட்டதற்கு மூலாதாரம். 1855-வது வருஷத்தில் கீழ்தரப் பொருட்காட்சி சாலைகள் ஐந்து வெவ்வேறு ஜில்லாக்களில் ஏற்பட்டன. ஆனால் அவைகள் சரியானவைகளாக ஏற்படவில்லை. 1861-வது வருஷத்தில் ராஜமஹேந்திரவரம் என்னு மிடத்தில் ஏற்பட்டிருந்ததைத் தவிர, மற்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த மியூஸியங்கள் எல்லாம் மூடிவிடப்பட்டன. அப்படி மூடிவிடப்பட்ட இடங்களி லிருந்த சாமான்களில் அனேகம் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் கொண்டுவந்து வைக்கப்பட்டன. 1855-வது வருஷத்தில் பிராணிகள் சேர்த்துவைக்கப்பட்டுள்ள தோட்டம் ஒன்று இக்கண்காட்சிச் சாலைக்குச் சேர்க்கப்பட்டது. ஆனால் 1863-வது வருஷத்தில் இது பீபில்ஸ்

பார்க்குக்குச் சேர்த்துவிடப்பட்டது. முந்திய சில வருஷங்களில், கர்ஸ்டன் என்பவரின் கீழ் சென்னை மியூஸியம் மிகவும் விருத்தியடைந்தது. ஜனங்களுக்குப் பிரியமுள்ளதாக இதைச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது., பிராணிகள், செடி கொடி முதலியவைகள், தாதுவர்க்கங்கள் இவைகளைப்பற்றியும், சிற்ப சாஸ்திரம், புராதன வஸ்துக்களைப் பற்றியும்., பிராசீன விஷயங்களைப் பற்றியும் ஏற்பட்டுள்ள விஷயங்கள், மனித வமிச நூல், ராஜதானியின் செல்வ அபிவிர்த்திக்குரிய சாதனங்கள் முதலானவைகளைப்பற்றி ஜனங்களுக்கு அறிவைப் புகட்ட இது ஒரு சாதகமான ஏற்பாடாகும். ஜனங்களுக்கு இதில் வாஞ்சையும் ஊக்கமும் இருப்பது பிரதி வருஷமும் நாலு லக்ஷம் ஜனங்களுக்கு மேல் இதை வந்து பார்த்துப் போவதிலிருந்து ஏற்படுகிறது. பிராசீன விஷயங்களையும் வஸ்துக்களையும் காட்டும் பாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் விசேஷமான பொருள்கள் சலவைக்கல் சிற்பவேலைத் திறத்தைக் காட்டும் பொருள்களே. இவை குண்டூர் ஜில்லாவிலுள்ள அமராவதியிலிருந்த பௌத்த ஸ்தூபத்தின் கைப்பிடிச் சுவர்களிலிருந்து கொண்டுவரப்பட்டவை. இவைகளில் ஒரு துண்டு பௌத்தரது எலும்புகளில் ஒன்றென்றும் கூறுகிறார்கள். அது அதே ஜில்லாவில் பட்டிப்புரோலு என்னுமிடத்தில் அகப்பட்டதாம். அது ஒரு பளிங்குப் பெட்டியில் வைத்து இன்னொரு கற்பெட்டியில் அடக்கம்செய்து வைக்கப்பட்டிருந்தது. பௌத்தரது பிரேத அங்கிஷ்டம் வைப்பதற்கென்று அப்பெட்டியில் செதுக்கப்பட்டிருந்தது.

கோட்டை ஆயுதசாலையிலிருந்தும், தஞ்சாவூர் அரண்மனையிலிருந்தும் சேகரித்த ஆயுதங்களும் கவசமும் சரித்

திர் ஆரம்பகாலத்திற்கு முந்திய காலத்திய அபூர்வப் பொருள்களும், தென் இந்தியாவில் ஆண்ட சுதேசமன்னர்கள் காலத்திய நாணயங்களும், அங்கு அதிகாரம் வாய்ந்திருந்த அனேகம் ஐரோப்பிய கம்பெனியார்கள் காலத்து நாணயங்களும் இந்தக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் அரிய பொருள்களிற் சில.

இந்த மியூஸியத்திற்குச் சேர்ந்துள்ளது கொன்னிமாரா பப்லிக் லைப்ரெரி (Connemara Public Library) என்ற வாசகசாலை. இது 1896-வது வருஷத்தில் திறக்கப் பட்டது. இதில் விசேஷமான புத்தகங்கள் பதிணுயிரத் திற்கு மேலேயே சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பிரதி வருஷமும் சுமார் 14,000 ஜனங்கள் வந்து இப் புத்தகங்களை உபயோகிருர்கள். நாடகசாலை ஒன்றும் இங்கு ஏற்பட்டிருக்கிறது. இது பிரசங்கங்கள் செய்வதற்கும், சங்கங்கள் கூடிப் பேசுவதற்கும், தர்மவிஷயங்களுக்குப் பொருள் சேர்க்க விஞேதார்த்தமாக நாடக பாத்திரங்களாக ஏற்படுபவர்கள் நாடகம் நடிப்பதற்கும் தகுந்த இடமாக ஏற்பட்டிருக்கிறது. இதில் லார்ட் காரன்வாலிஸ் துரையின் சிலையும் இருக்கிறது.

விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட் (Victoria Tecnical Institute):—இது மியூசியத்தை ஒட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடம் ஒரு திறந்த வெளியில் வெகு அழகாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் நமது சென்னை ராஜதானியில் கைத்தொழிலால் செய்யப்படும் பலவிதமான சாமான்களைக் காட்சிக்காக வைத்திருப்பதுடன் அவைகளை விலைக்கும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

இதன் வெளியிலுள்ள காலி மனையில் பலவித மரம் செடிகளையும் வைத்து விருத்திசெய்து அவைகளின் பெயர்

களை இங்கிலீஷிலும் தமிழிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



இந்த இன்ஸ்டிடியூட் ஒரு கமிட்டியாரால் நடத்தப்பட்டு வருவதுடன் சக்காராரின் பொருளுதவியையும் பெறுகிறது.

அக்வேரியம் (Aquarium) —சென்னையிலுள்ள விசேஷமான கண்காட்சிச் சாலைகளுள் இது ஒன்று. அக்வேரியம் என்ற பற்பல ஜாதி மீன்களும், கடற் பாம்புகள் முதலானவைகளும் வைக்கப்பட் டிருக்கும் இடம். இது பிரெசிடென்ஸி காலேஜிக்கு எதிராக சமுத்திரக் கரையில் ஏற்பட்டிருக்கிறது. பற்பல வகை மீன்கள், கடற் பிராணிகள் முதலியவைகளைப்பற்றி ஜனங்களுக்குத் தெரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் சர்க்காரால் இது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வைக்கப்பட்டிருக்கும் மீன் முதலியவைகளைப் போய்ப்பார்க்க ஒரு சிறு கட்டணம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பிரதி தினமும் அனேக ஜனங்கள் இதைப் பார்த்துவிட்டுப்போகிறார்கள். இவ்வளவு பெயர்கள் வந்து பார்த்துப் போனார்கள் என்ற கணக்கை ஜனங்களை உள்ளேவிடும் கதவே குறித்துவிட ஏற்பாடு செய்

யப்பட்டிருக்கிறது. ஆதலால் வாயிற்படியிலுள்ளவன் வசூல் செய்யும் தொகையை மோசம்செய்ய முடியாது.

சென்னை ஹைகோர்ட் (High Court)—பீச்சுக்கு சமீபத்தில் உள்ளது. இக் கட்டிடத்தின் முதல் மெத்தையில் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளும், சிடி ஸிவில் கோர்ட்டும் இருக்கின்றன. இதன் கீழ் புரத்தில் உள்ள பெரிய ஹால்களில் ஒரிஜினல் ஸைட் என்றும், அப்பலேட் சைட் என்றும்



சொல்லப்படும் எட்டு ஹைகோர்ட்டுகள் இருக்கின்றன. சென்னை ராஜதானியிலேயே ஸிவில், கிரிமினல் முதலிய இரண்டு வேலைகளையும் செய்யும் பெரிய கோர்ட்டுகளே இவை. இந்த ஹைகோர்ட்டில் சீப் ஜஸ்டிஸ் என்ற ஒருவரும், இருபது பெயர்களுக் கதிகப்படாமல் ஹைகோர்ட்டு ஜட்ஜுகளும் ஏற்பட்டிருக்கலாம். இவ்வளவு ஜட்ஜுகள் இருக்க வேண்டுமென்பதை அவ்வப்போது அதிகாரிகள் நிர்

ணயிப்பார்கள். தற்காலம் சீப் ஜஸ்டிஸ் நீங்கலாக 11 ஜட்ஜுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஐரோப்பாவில் சில வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட பெரிய ஜர்மன் சண்டையில் இந்தியாவில் சென்னபட்டணம் ஒன்றுதான் பாதிக்கப்பட்டது. எம்டன் என்ற ஜர்மன் சண்டைக்கப்பல் ஒன்று 1914ஹு செப்டம்பர் மீ 22உ இரவு இவ்வூருக்கருகே சமுத்திரத்தில் வந்து சில வெடிகுண்டுகளைச் சுட, அதனால் சில கட்டடங்கள் இடிந்து சேதமானதுடன், சமுத்திரக் கரையில் கட்டப்பட்டிருந்த மண் எண்ணெய்க் (Kerosine Oil) கிணறுகள் தீப்பற்றிக்கொண்டு அவற்றின் சொந்தக் காரர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டாக்கிற்று. இந்த சம்பவ விவரம் அக்குண்டு முதல் முதல் தாக்கிய ஐகோர்ட்டு (High Court) கட்டட வடபுரத்தில் ஒரு கல்லில் வரையப்பட்டிருக்கிறது.

பாங்குவெட்டிங் ஹால்(Banqueting Hall)—இது மௌண்ட்ரோட்டின் வடக்கில் இருக்கிறது. இது சென்னை கவர்னர் வசிக்கும் கவர்ண்மெண்டு அவுஸில் இருக்கிறது. நாலு பக்கங்களிலும் விசாலமான தோட்டம் இக்கட்டிடத்தைச் சுற்றி யுண்டு. இந்தத் தோட்டத்தில் மான்கள், புள்ளிமான்கள் முதலியன விடப்பட்டிருந்தன. அவை இப்பொழுது கிண்டியிலுள்ள கவர்னர் பங்களாவுக்குப் போய்விட்டன. மேற்கூறிய கவர்ண்மெண்டு அவுஸ் ஆவரணத்துக்குள் கட்டப் பட்டிருக்கும் இந்த ஹால் சீரங்கப்பட்டணம் பிடிபட்டதற்கு அறிகுறியாக ஏற்படுத்தப் பட்டதாம். இந்த ஹாலில் நேர்த்தியான எண்ணெய்ச்சாயம் தீர்ந்த அனேகம் படங்கள் (Oil Painting) வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் தென் இந்தியா சரித்திர சம்பந்தமுள்ள சென்னை கவர்னர்களது படங்களே. நேர்த்

தியான விக்டோரியா மஹாராணியினது படமும் இங்கு வைக்கப் பட்டிருக்கிறது. இதற்கு வலதுபுரத்தில் மூன்றுவது ஜார்ஜ் சக்கிரவர்த்தியினது படமும் இடது புரத்தில் சார்லோ மஹாராணியினது படமும் இருக்கக் காணலாம். இந்த ஹால் ராஜாங்க விஷயமான அனுஷ்டானங்கள் நடந்தேறுவதற்கு உபயோகிக்கப் படுவதுமன்றிப் பொது நாட்டியக் கச்சேரி நடத்தவும், சபை முதலியன கூடுவதற்கும் உபயோகமாகும்.

சேனட் அவுஸ்: (Senate House)--இது தெற்கு பீச் ரோட்டில் இருக்கிறது. சென்னை யூனிவெர்ஸிட்டியின் ஸ்தானம் 1857-வது வருஷத்திய இந்தியா கவர்ண்மெண்டின் 27-வது ஆக்டின்படி, 1857-வது வருஷம் செப்டம்பர் மாதம் 5-ம்தேதி கூட்டப்பட்டு நடைபெற்றுவரும் யூனிவெர்ஸிட்டி நடத்தும் பரீக்ஷைகளில் தேறிப் பாண்டித்தியம் பெற்றவர்கள் யோக்கியதாபத்திரம்அளிக்கப்படுவதுஇங்குதான். யூனிவெர்ஸிடி ரிஜிஸ்திராரது ஆபீசு இங்குதான் ஏற்பட்டிருக்கிறது. யூனிவெர்ஸிடிப் பரீக்ஷையில் தேறினவர்களது பெயர்கள் முதல்முதல் பிரசுரம் செய்யப்படுவதும் இங்கேயே.

ஜனங்கள் தோட்டம் (Peoples' Park).--இது ஸெண்டிரல் ஸ்டேஷனுக் கருகில் இருக்கிறது. கூவம் நதிக்கு மேற்காக உள்ள இந்தத் தோட்டம் தெற்கில் பூந்தமல்லி ரஸ்தாவுக்கும், வடக்கில் சைதென்ஹாம் ரஸ்தாவிற்கும் இடையிலுள்ள ஒரு திறந்த வெளித்தோட்டம். நகர மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த அழகிய நந்தவனம் அங்கங்கு நெருக்கமாக ஏற்படாதபடி வைத்திருக்கப்பட்ட அனேகம் மரங்களுடன் கூடியிருக்கிறது.

இங்கு காட்டு மிருகங்களின் காட்சிசாலை ஒன்று மிருக்கிறது. அங்கு புலி, சிறுத்தை, சிங்கம், ஓநாய், காடி, மான்

கள், தீப்பறவை, பலவகைப் பறவைகள், குரங்குகள் முதலி யன ஜனங்கள் பார்த்துப்போக வைத்திருக்கிறார்கள். அவை களைப் போய்ப் பார்க்க ஆள் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் பரிபாலிக்கும் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் வசூல் செய் கிறார்கள்.

இந்தப் பீபில்ஸ் பார்க்கில் திங்கட்கிழமை தினங்களில் வாலண்டியர் கார்ட்ஸ் பாண்டு வாத்தியம் வாசிக்கப்படும். இப்பொழுது ஹிந்துக்களுக்குப் பிரியமான நாகசுரமும் வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பிரதி வருஷமும் இங்கு நடைபெற்று வந்த கிரிஸ்த- மஸ் சந்தை 1886-வது வருஷத்தில் நேர்ந்த தீ விபத்தினால் நிறுத்திவிடப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது 1901-வது வருஷம் முதல் அது மறுபடியும் நடைபெற்று வருகிறது.

சென்னை டெலிபோன் கம்பெனி (Telephone)— 1923-வது வருஷ ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டு முன் சென்னை ஓரியண்டல் டெலிபோன் எலெக்ட்ரிக் கம்பெனி நடத்திவந்த வேலையை எடுத்துக்கொண்டது. இச்சங்கத் தின் மூல திரவியம் ஐம்பது லக்ஷம். இச்சங்கத்தவர்கள் லாபத்தை இஷ்டப்படி பங்குக்காரர்களுக்கு விநியோகித்துக் கொடுக்கமுடியாது. ஸர்க்காருடன் செய்துகொண்டிருக் கும் ஒப்பந்தத்தின்படி வசூலான மூல திரவியத்தின்மேல் நூற்றுக்குப் பன்னிரண்டரை வீதம் வட்டி கொடுத்துப் பாக்கியிருந்தால் அதை ஸர்க்காரும், கம்பெனி அங்கத்தவர் களும், கையொப்பக்காரர்களுமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டியது.

பிரஸிடென்ஸி கல்லூரி (Presidency College)—இது சேபாக்கில் தெற்கு பீச்சு ரோட்டில் இருக்கிறது. இது

ஒரு பெரிய நேர்த்தியான கட்டிடம். 1841-ம் வருஷத்தில் ஏற்பட்டு ஆரம்பத்தில் ஒரு உயர்தரக் கலாசாலை (High School) யாக இருந்தது, விருத்தியாய்க்கொண்டேவந்து 1858-வது வருஷத்தில் ஒரு கல்லூரியாக ஏற்பட்டது. 1841-வது வருஷம் முதல் 1870-வது வருஷம் வரையில் இக் கல்லூரி எழும்பூரில் ஒரு வாடகைக் கட்டிடத்தில்தான் நடைபெற்று வந்தது. 1858-வது வருஷம் மார்ச்சு மாதத்தில் சேப்பாக்கில் அது இப்பொழுது இருக்கும் கட்டிடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அந்த சம்பவத்தை ஆரம்பித்தது டியூக் ஆப் எடின்பரோ (Duke of Edinborough). காலேஜ் நடுத்தர வகுப்பும் பி. ஏ. வகுப்பும், எல்லாப்பாகங்களிலும் போதிக்கப்பட இங்கு ஏற்பாடு உண்டு. பற்பல விஷயங்களில் பாண்டித்தியம் பெற்ற வேவ்வேறு ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் போதிக்க நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். இது ஸர்க்காரால் நடத்தப்பட்டு வருகிறது.

இக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் போஜன வசதிக்காக விக்டோரியா ஹாஸ்டல் என்ற ஒரு ஹோட்டல் ஏற்பட்டுளது. மாணவர்கள் குடியிருந்துகொண்டு காலாகாலங்களில் போஜனம் செய்துவிட்டுத் தங்கள் தங்களது படிப்பில் கவனத்தைச் செலுத்தலாம். அவர்கள் தங்கியிருக்கக் கல்லூரிக் கட்டிடத்தின் பின் கட்டிடங்கள் பிரத்தியேகமாக அமைக்கப்பட் டிருக்கின்றன.

ஸ்திரீகள் கல்லூரி (Queen Mary's College):—இது தெற்கு பீச்சுரோட்டில் கட்டப்பட்டுளது. ஸ்திரீகள் படித்துப் பாண்டித்தியத்தை அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் இக் கல்லூரி ஸர்க்காரால் நடத்திவரப்படுகிறது.

இக் கல்லூரிக்குச் சேர்ந்த ஹோட்டலும் உண்டு. ஜாதி வித்தியாஸத்தை அனுசரித்துக் கூடி உட்கார்ந்து போஜ

னம் செய்ய மூன்று பிரிவுகளாக இந்த ஹோட்டல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இக் கல்லூரியின் தலைமை உபாத்தினிமாரும் இன்னும் மற்ற உபாத்தினிமார்களும் இந்தக் கல்லூரி ஹோட்டலிலேயே தங்கி வசித்துவருகிறார்கள். பெற்றோர்கள் அல்லது கார்டியன்களுடன் வசிக்காத பெண்கள் இக் கல்லூரியின் ஹோட்டலிலேயே இருந்து போஜனம் செய்துகொண்டு படிக்கலாம். சம்பளம் ரூல்படி ஏற்பட்டிருக்கும் தொகையில் பாதியே. ஒரு கல்லூரிப் புத்தகசாலை (College library) ஏற்பட்டு விருத்தியாகிக் கொண்டு வருகிறது.

மதராஸ் ஆஸம் (Madrasa-i-Azam)—இது ஸ்பென்ஸர் கட்டிடத்திற் கருகில் மௌண்ட்ரோட்டில் கட்டப்பட்டிருக்கிறது. இது முகம்மதிய மாணவர்களுக்காகத் தான் ஏற்பட்டுளது. வேறு ஜாதியார்களுக்கு இடம் தரப்படமாட்டாது. இது முதல் முதல் கர்னாடக நவாப்பினால் ஸ்தாபிக்கப்பட்டது. 1859-வது வருஷம் மே மாதம் முதல் தேதி இது ஸர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. இது ஒரு உயர்தரக் கலாசாலை (High School). ஆங்கிலம் ஹிந்துஸ்தானி, அரபி, தமிழ், வியாபார விஷயபோதனை (Commercial Instruction), டிராயிங் (Drawing) முதலியன இங்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன. கிரமமாக நிர்ணயித்துள்ள பள்ளிக்கூடப் பாடங்கள் நடக்கவேண்டிய காலத்தைத் தவிர மற்ற வேளைகளில்தான் மதத்தைப்பற்றிய போதனைசெய்ய இங்கு ஏற்பாடு உண்டு. சுன்னிப்பிரிவு, ஷியாப் பிரிவு மாணவர்களுக்கு முகம்மதிய மௌல்விகள் மதத்தைப்பற்றிப் போதிப்பார்கள். கடவுளைத் துதிக்க இங்கு ஒரு ஹாலும் ஏற்பட்டுளது. ஸர்க்கார் சட்டப்படி மாணவர்கள் செலுத்தவேண்டிய சம்பளத்தில் பாதிதான்

இதில் படிக்கும் மாணவர்கள் கொடுக்கவேண்டும். இக் கலாசாலைக்கும் ஒரு ஹாஸ்டல் உண்டு. அது இக் கலா சாலைக் கட்டடத்தை யொட்டிக் கட்டப்பட் டிருக்கிறது.

மாணவர்கள் ஓடியாடி விளையாடித் தேகப்பயிற்சி செய்து கொள்ளப் பெரிய விளையாடுமிடம் இக்கலாசாலையில் உண்டு.

சித்திரக் கலாசாலை (School of Arts)--1850-வது வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இது பூந்தமல்லி ரஸ் தாவில் எழும்பூர் ரயில்ஸ்டேஷனுக்கருகே உளது. இது இக்கலாசாலைக்கென்றே கட்டப்பட்ட ஒரு கட்டிடம். இங்கு (Drawing) சித்திரமெழுதுவதிலும், வர்ண சித்திரம் வரை வதிலும், செதுக்குச் சித்திரவேலையிலும் மெருகெண்ணை பூசுவதிலும், வெள்ளி முதலிய உலோகங்களிலும், மரம், பிரம்பு முதலியவைகளைக்கொண்டு வேலைசெய்வதிலும் மாண வர்கள் கற்றுக்கொடுக்கப்படுவார்கள். போதனைகாலம் காலை எட்டுமணி முதல் மாலை நான்கு மணிவரை. ஆனால் சனிக் கிழமை தினங்களில் இக்கலாசாலை 12 மணிக்கே சாத்திவிடப் படும். மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூல்செய்யப் படு வதில்லை. இங்கு கற்றுக்கொடுக்கப்படும் தொழில்கள் எதைத் தெரிந்தெடுத்துக் கொண்டாலும் அதில் மூன்று வருஷத்திய பயிற்சி ஏற்படவேண்டும். ஐந்து முதல் ஆறுவருஷங்கள் வரை கூடப் பயிற்சி செய்துகொள்ள விடுவதுமுண்டு.

கால்நடை வைத்தியக் கல்லூரி. (Veterinary College). இது வேப்பேரியில் இருக்கிறது. 1903-வது வரு ஷத்திற்கு முன் இந்த ராஜதானியில் கால்நடைகளின் நோயைத்தீர்க்கப் போதிக்கவேண்டிய ஒழுங்கான ஏற்பாடு கள் உள்ள கலாசாலைகள் ஏற்பட் டிருக்கவில்லை. ஆரம்பத் தில் 1903-வது வருஷத்தில் டாப்பின் ஹால்(Dobbin Hall) என்ற ஒரு வாடகைக் கட்டிடத்தில் இது ஸ்தாபிக்கப்பட்

டது. 1905-வது வருஷத்தில் இப்பொழுது இருக்கும் கட்டிடத்திற்கு அது மாற்றப்பட டாப்பின் ஹால் இக் கல்லூரியின் ஹாஸ்டலாக ஏற்பட்டது. கால்நடை வைத்தியர்களாக ஏற்பட விரும்புவோர்களுக்கு இங்கு போதிக்கப்பட்டு இந்தக் கல்லூரி யோக்கியதாபட்டம் பெற மாணவர்கள் தயார் செய்யப்படுவார்கள். இந்த யோக்கியதாபட்டம்பெற மூன்று வருஷகாலம் இக்கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும்.

ஸமஸ்கிருத கல்லூரி. (Sanskrit Patasala)—இது மைலாப்பூரில் ராயப்பேட்டை ஹைரோட்டில் இருக்கிறது. இதை ஸ்தாபித்தவர் காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர். மேல்தர சம்ஸ்கிருத அறிவைப் புகட்டும் நோக்கத்துடன் இதை ஸ்தாபித்து இது சரிவர நடந்தேற, திரவியமும் வைத்துவிட்டுப் போயிருக்கிறார் அவர். மாணவர்கள் இங்கு பாண்டித்தியம் பெற்ற பிறகு கிரந்த ஆராய்ச்சி செய்யவும் அவகாசம் உண்டு. சென்னை யூனிவெர்ஸிட்டி அளிக்கும் கீழ்நாட்டு யோக்கியதா பட்டங்களை அடையத்தேறவேண்டிய பரீக்ஷைக்கு மாணவர்கள் இக் கல்லூரியில் தயார்செய்யப்பட்டு வருகிறார்கள்.

இக்கல்லூரிக்கும் இத்துடன்சேர்ந்துள்ள ஒரு ஹோட்டல் உண்டு. அதன் பெயர் "பாலாம்பாள் ஹாஸ்டல்." இக் கல்லூரியை ஸ்தாபித்தவரது மனைவியின் ஞாபகக் குறியாக அப் பெயர் அளிக்கப்பட்டது. இங்கு சாப்பாடு இலவசமாகவே போடப்படுகிறது.

இக் கல்லூரிக்குச் சேர்ந்த ஒரு நேர்த்தியான புத்தகசாலை (Library)யும் இருக்கிறது.

பார்த்தசாரதி கோவில் (Parthasarathy temple):—திருவல்லிக்கேணியில் பிரசித்தியான கோவில் பார்த்த



[redacted]வல்லிக்கேணி கோயில்.

சாரதிப் பெருமாள் கோவில். பார்த்தன் என்ற அர்ச்சுனனது ரதத்தை ஓட்டியதால் பார்த்தசாரதி யென்ற திருநாமம் வாய்ந்த பெருமாள் கோவில் இது. கிருஷ்ண பரமாத்மா, பலராமர், ருக்மணி முதலிய தனது வர்க்கத்தவர்களுடன் இங்கு எழுந்தருளியிருக்கிறார். உள் பிராகாரத்தில் ஸ்ரீராமர் ஸந்நதியும், ரங்கநாதர் ஸந்நதியும் வெளிப்பிராகாரத்தில் நரசிம்மப்பெருமாள் ஸந்நதியும், வரதராஜஸ்வாமி சந்நதியு மிருக்கின்றன.

இக்கோவிலுக்கு எதிரில் உள்ள குளத்தில் மீன்கள் வசிப்பதில்லை. அதற்குக் காரணம் ஒரு ரிஷியின் சாபமென்று கூறுகிறார்கள்.



கபாலீசுவரர் கோயில் (Kapalisvarar temple)—மையிலாப்பூரில் கபாலீசுவரர் கோவில் என்ற கோவில் இருக்கிறது. இக்கோவிலின் வெளிக்கோபுரம் கிழக்குப் பக்கமாக இருந்தபோதிலும் உள்ளே ஸந்நிதானம் மேற்குப் பார்த்ததா

கத்தான் ஏற்பட்டிருக்கிறது. இக்கோவிலுக்கு மேற்குப்புரத்தில் ஒரு அழகிய பெரிய குளமுண்டு. ஒரு சமயம் பார்வதி தேவியார் மயில் ரூபத்துடன் பரமசிவனை இங்கு பூஜித்ததிலிருந்து இந்த இடம் மயிலாப்பூர் என்ற பெயர் பெற்றதாம். இக்கோவிலின் வெளிப்பிராகாரத்தில் எலும்பைப் பெண்ணாக்கிய திருஞானசம்பந்தர் சந்நதியும், தெற்குப்பக்கத்தில் வாயிலார் நாயனார் சந்நதியும் இருக்கக் காணலாம். அறுபத்து மூவர் உற்சவம் இந்த மயிலாப்பூரில் பங்குனிமாதத்தில் நடைபெறும்.

ஓஷதித் தோட்டம் (Botanical Garden)—இது தேனாம்பேட்டைக் கருகில் செயின்ட் ஜார்ஜ் கதீட்ரெல் ரஸ்தாவில் இருக்கிறது. இது அழகாய் அமைக்கப் பட்டுள்ள ஒரு நந்தவனம். இங்கு அனேகம் அரிய மரம் செடி கொடிகள் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. இது 1835-வது வருஷத்தில் ஆரம்பம் செய்யப்பட்டது. பிரதி தினமும் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை ஜனங்கள் இதைப் போய்ப் பார்க்கலாம். இங்கு தாவர விஷயப் புத்தகசாலையும் ஒன்று உளது. பிப்ரவரி மாதத்தில் இந் நகரில் மிகவும் சிலாக்கியமாக வைக்கப்பட்டிருக்கும் தோட்டத்திற்குப் பரிசளிப்பதும் உண்டு. வருஷக் கண்காட்சியும் ஏற்படுத்துவது வழக்கம். சாதாரணமாய் அது பிப்ரவரி மாதத்துக் கடைசிச் சனிக்கிழமையன்று நடைபெறும். அப்பொழுது அனேகம் பெயர்கள் பரிசுபெற்றுப் போக அவகாசம் ஏற்படும். புஷ்பங்கள், பழங்கள், காய்கறிகள், தானியங்கள், நார், சாயம், முதலியவைகளிற் சிறந்த காட்சிப் பொருள்கள் கொண்டு வருபவர்கள் பரிசு பெறுவார்கள். பயிர் செய்தலிலும், தோட்டங்கள் முதலியன ஏற்பாடு செய்வதிலும் பிரியமுள்ள எவரும் இச் சங்கத்தின் அங்கத்

ளாகச் சேரலாம். அவர்கள் கொடுக்கவேண்டியிருக் கையும் அதிகமில்லை. அதற்குப் பிரதியாக அவர்கள் செடி கொடிகளை அடையவும் கூடும்.

சென்னை விவசாய தோட்டவேலைகள் சங்கம்: (Agri-Horticultural Society). இது 1835-வது வருஷத்தில் தென் இந்தியாவில் தோட்டங்கள், விவசாயம் முதலியன அபி விர்த்தியாகவேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப் பட்டது. இச் சங்கம் தென் இந்தியாவில் ஆங்கில நாட்டுக் காய்கறி கந்தமூலங்கள், பழங்கள், தோட்டங்களில் அலங் காரத்திற்குரிய மரஞ்செடிகள் முதலியவைகளிடம் ஜனங் களுக்குப் பிரீதியை உண்டாக்க மிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த ராஜதானியிலே இது தோட்ட அபிவிர்த்தி விஷயத்தில் சிறந்தவேலை செய்திருக்கிறது. எந்த ஜாதியைச் சேர்ந்த ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி இந்தச் சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேரலாம்.

தென் இந்தியா இருப்புப் பாதை: (South Indian Railway)—முன்பு பெரிய தென் இந்தியா இருப்புப்பாதை கம்பெனி, கர்நாடக ரயில்வே கம்பெனிகளுக்குச் சொந்த மாய் அவர்களால் நடத்திவரப்பட்ட இந்த இருப்புப் பாதை 1874-வது வருஷத்தில் தென் இந்தியா இருப்புப் பாதை என்ற பெயர்கொடுத்து ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. 1891-வது வருஷத்தில் இது ஸர்க்காரால் வாங்கப்பட்டு நடத்தி வரத் தென் இந்தியா கம்பெனிக்காரர்களிடமே விடப்பட் டிருந்தது.

கம்பெனிக்காரர்களுக்கும் ஸர்க்காருக்கும் ஏற்பட் டுள்ள ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்: (1) மூல திரவியத் தொகைக்குப்பதிலாக ஸர்க்கார் நிலம்கொடுப்பது, (2) கம்பெனி யாருடைய பங்குகளின் தொகையாகிய பத்துலக்ஷம் பவுன்களின்

மேல் நூற்றுக்கு மூன்றரை வட்டிக்கு உத்திரவாதியாக இருப்பது, (3) செலவு நீங்கிய லாபம் ஸர்க்கார் மூலதிரவியம் முதலானவைகளின் வட்டி நூற்றுக்கு மூன்றரை வீதம் கொடுக்க உபயோகப்படுத்தப்பட வேண்டியது. அப்படி உபயோகப் படுத்தியபிறகு பாக்கி நிற்பது கம்பெனிக்காரர்களாலும் ஸர்க்காராலும் அவரவர்கள் போட்டிருக்கும் மூலதிரவியாசாரம் பகிர்ந்து எடுத்துக்கொள்ளப் படவேண்டும். (4) இருப்புப் பாதையும் அதற்கு சம்பந்தமான எல்லாச் சாமான்களும் ஸர்க்காரைச் சேர்ந்தன. அவர்கள் 1945-வது வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி ஒப்பந்தத்தை மறுபடியும் தீர்மானிப்பார்கள். அப்படியில்லாவிட்டால் அடுத்த ஏதாவது ஒரு ஐந்துவருஷக் கடைசியில் அப்படிச் செய்வார்கள். ஒப்பந்தம் முடிவுபெற்றதும் அல்லது ஒப்பந்தம் மறுபடியும் நிர்ணயிக்கப்பட்டதும் ஸர்க்கார் இருப்புப் பாதையையும் அதைச் சேர்ந்தவைகளையும் எடுத்துக்கொண்டு கம்பெனிக்காரருடைய மூலதிரவியம் ஒரு லக்ஷம் ரூபாயையும் அப்படியே திருப்பிக்கொடுத்துவிட வேண்டியது.

எழும்பூரிலிருந்து தெற்குநோக்கிப் போகும் இருப்புப் பாதைக்கு சமுத்திரக் கரையிலிருந்து ஒரு கிளையுமிருக்கிறது.

சென்னை தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதை (Madras and Southern Mahratta Railway):—இதற்குப் பெரிய ரயில் என்றும் பெயருண்டு. இது பார்க்டௌனில் ஸெண்ட்ரல் ஸ்டேஷன் என்னும் இடத்திலிருந்து புறப்படுகிறது. இது ஒரு நேர்த்தியான கட்டடம். இதன் ஸ்தூபியில் நான்கு பக்கங்களிலும் மணி காட்டக்கூடிய ஒரு பெரிய கடிகாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இருப்புப்பாதை பல கிளைகளாகப் பிரிந்து பம்பாய், கல்

ா, பெங்களூர், மங்களூர் முதலிய இடங்களுக்குச் லுகிறது.

இந்தக் கம்பெனிக்காரர்களுக்கும் ஸர்க்காருக்கும் ஏற்பட்டிருக்கும், ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் அநேகமாய்ச் சின்ன ரயிலெனப்படும் தென் இந்தியா இருப்புப்பாதைக் கம்பெனியாருடன் ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளையே ஒத்திருக்கின்றன. ஆனால் மூலதனம் அதிகம். இவர்களது ஒப்பந்தத்தை 1937-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி மறுபடியும் தீர்மானிப்பார்கள். அல்லது அடுத்த ஏதாவது ஒரு ஐந்து வருஷக்கடைசியில் அப்படிச் செய்யலாம்.

இக்கம்பெனியாரின் காரியஸ்தலம் இந்த ரயில்வே ஸ்டேஷனுக் கருகே கிழக்கில் ஸமீபத்தில் கட்டப்பட்ட ஒரு நேர்த்தியான கட்டடத்தில் ஏற்பட்டிருக்கிறது.

விக்டோரியா ஆஸ்பத்திரி (Victoria Hospital for women)-இந்நகரில் இன்னொரு விசேஷமான இடம் கோஷா ஆஸ்பத்திரி. இது திருவல்லிக்கேணியில் சமுத்திரக்கரைக்குக் கொஞ்சதூரம் மேற்கில் பெல்ஸ் ரோட்டில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு ஸ்திரீகளுக்கு மாத்திரமே வைத்தியம் செய்யப்படும். இது 1865-வது வருஷத்தில் ஜனங்களிடமிருந்து வசூல்செய்யப்பட்ட பொருளைக்கொண்டும், வெங்கடகிரி மஹாராஜா உதவிய பொருளைக் கொண்டும் ஏற்படுத்தப்பட்டது. 1885-வது வருஷத்தில் அது திறக்கப்பட்டபோது வாடகைக் கட்டடத்தில்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது அது கட்டப்பட்டிருக்குமிடம் சர்க்காரால் இனமாகக் கொடுக்கப்பட்டுப் பிறகு, 1886-வது வருஷத்தில் வேலை துவக்கப்பட்டது.

முதல்முதல் இந்த ஆஸ்பத்திரி மேல்ஜாதி ஸ்திரீகளுக்கும் கோஷாஸ்திரீகளுக்கு மாத்திரமென்று ஏற்பட்டது. நாளடைவில் எல்லா ஸ்திரீகளுக்குமே உதவிபுரியும்படியாக அதுமாறிவிட்டது. கண் வியாதிகளுக்கு மாத்திரம் இங்கு வைத்தியம் செய்யப்படுவதில்லை. அதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் கண் ஆஸ்பத்திரிக்குத்தான் நோயாளிகள் போகவேண்டும். எல்லாஜாதி ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் வைத்தியம் பார்க்கப்பட்டு வந்தாலும், அங்கேயே தங்கி வைத்தியம் செய்துகொள்பவர்களில் நல்ல ஜாதி ஸ்திரீகள் அல்லது கோஷா ஸ்திரீகளுக்கென்றே இடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லா ஜாதி ஏழை நோயாளிகளுக்கும் வைத்தியம் இனமாகச் செய்யப்படும். அவர்கள் வெளியில் இரு

...ாண்டு மருந்தும் சிகிச்சையும் மாத்திரம் ஆஸ்பத்திரி ...ந்து பெற்றுக்கொள்ளலாம். அப்படிக்கின்றி ஆஸ்பத்திரியிலேயே வியாதி சொஸ்தமாகும்வரை தங்கியிருந்தும் வைத்தியம் செய்து கொள்ளலாம். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து வைத்தியம்செய்துகொள்பவர்கள் பணக்காரர்களாயிருந்தால் அவர்களிடமிருந்து பணம் வசூல்செய்து கொள்ளப்படுவதுமுண்டு. மாதம் ஐம்பது ரூபாய்க்குமேல் வருமானமுள்ளவர்களிடமிருந்து பணம் வசூல்செய்கிறார்கள். மூன்று வருஷம் ஸ்திரீகள் பழகி தாதி (நர்ஸ்) (Nurse) என்ற நோயாளிகளைப் பார்த்துக்கொள்ளும் வேலைக்கு லாயக்காக ஏற்பாடும் இங்கு செய்யப்பட்டிருக்கிறது.

கண் ஆஸ்பத்திரி (Eye Infirmary)—இது எழும்பூரில் மார்ஷல் ரஸ்தாவில் மியூஸியத்திற்குக் கிழக்கில் இருக்கிறது. இது 1886-வது வருஷம் ஏப்பிரல் மாதம் முதல் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. இதில் நோயாளிகள் வெளியிலிருந்து வந்து பிரதிதினமும் சிகிச்சை பெற்றுப் போகலாம். அப்படிக்கின்றி இக் கட்டடத்திலேயே நோய் திருமளவும் தங்கியிருந்து நோய் நீங்கினதும் போகலாம். தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்குச் சௌகரியமான இருப்பிடம் ஏற்படுத்தப்பட்டுளது. புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் பிரத்தியேகமான இருப்பிடங்கள் உண்டு. கண் சிகிச்சை பிரதி செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமைகளில் காலை ஏழு மணிக்குச் செய்யப்படும். ஆயினும் அவசரமான காலங்களில் எப்பொழுதுமே உதவி கிடைக்கும். பிரதிதினமும் காலையில் ஏழுமணி முதல் ஒன்பதுமணி வரையும் வெளியிலிருந்து வந்துபோகும் நோயாளிகள், கவனித்து சிகிச்சை செய்யப்படுவார்கள். செவ்வாய்க்கிழமை தவிர மற்ற நாட்களில்,

பார்க்க விரும்புபவர்கள் மாலை நாலு மணி முதல் ஆறு மணி வரை வந்து பார்த்துவிட்டுப் போகலாம்.

பிரசவ ஆஸ்பத்திரி (Maternity Hospital) --- இது எழும்பூரில் பாந்தியன் ரஸ்தாவில் இருக்கிறது. பிரசவிக்கப்போகும் ஸ்திரீகள் எந்த ஜாதியாக விருந்தாலும் இங்கு தங்கிப் பிரசவமாய்ச் சிலநாட்களுக்குப் பிறகு புறப்பட்டுப் போகலாம். இது 1844-வது வருஷம் ஜூலை மாதம் 26-ம் தேதி திறக்கப்பட்டது. வெளியிலிருந்துவரும் கர்ப்ப.ஸ்திரீகள் பிரதிகாலையிலும் ஏழுமணிமுதல் ஒன்பது மணிவரை பார்வையிடப் படுவார்கள். இங்கு சிகிச்சை பெற வருபவர்களிடமிருந்து பணவசூல்செய்ய ஒருவித ஒழுங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது புருஷன் அல்லது பெற்றோர்களது வருமானத்தை ஒட்டியும், சிகிச்சை பெற வருபவர்கள் ஐரோப்பிய ஸ்திரீகளா சுதேச ஸ்திரீகளா என்பதை அனுசரித்தும் நிர்ணயிக்கப்படும். சர்க்கார் உத்தியோகஸ்தர்களைச் சார்ந்த ஸ்திரீகளிடமிருந்து வாங்கும் தொகை மற்றவர்களைச் சார்ந்துள்ளவர்களிடமிருந்து வசூல் செய்யப்படும் தொகைக்குக் குறைந்தே இருக்கும்.

பைத்தியக்காரர் வைத்தியசாலை (Mental Hospital)-இது கீழ்ப்பாக்கத்தில் ஒருபெரிய தோட்டத்திலிருக்கிறது. 1912-வது வருஷத்திய பைத்தியங்கள் சம்பந்தமான 4-வது மசோதாவின்கீழ், சித்தப்பிரமையுடன் கூடியவர்கள் இங்கு வைத்து ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள். இங்கு கொண்டுவரப் படுபவர்கள் பைத்தியம் பிடித்துள்ளவர்கள் என்று டாக்டர் ஸர்டிபிகேட்டு கொண்டுவந்தால் ஒழிய அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

இப் பைத்தியக்காரர்களால் மற்றவர்களுக்குத் தீங்கு நேரிடாதென்று ஏற்பட்டால் ஒழிய, இங்கு கொண்டுவந்து

ர்க்கப்பட்டவர்கள் மறுபடி வெளியில் அனுப்பப்பட ட்டார்கள். இங்கிருக்கும் பைத்தியக்காரர்களது சிநேகிதர்கள், பந்துக்கள் முதலானோர் சனிக்கிழமை தினங்களில் மாலை இரண்டுமணி முதல் நாலுமணி வரை அவர்களைப் போய்ப் பார்த்துவரலாம். மற்ற நாட்களில் பார்க்க விரும்பினுல் முந்தியே தெரிவித்து ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

குஷ்டரோகி ஆஸ்பத்திரி (Leper Hospital) — இது ராயபுரத்திற் கருகில் பிராட்வேயின் வடகோடியி லிருக்கிறது. இது 1841-வது வருஷத்தில் திறக்கப்பட்டது. இங்கு எல்லா ஜாதி குஷ்டரோகிகளும் இருக்கும்படி ஏற்பட்டிருக்கிறது. ரோகிகள் இங்கு தங்கி, உணவு, வஸ்திரம் முதலியன கொடுக்கப் பெறுகிறார்கள். ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் பிரத்தியேகமான இடங்கள் உண்டு. பற்பல ஜாதி ரோகிகள் கடவுளைத் துதிக்கவும் தனித்தனியான இடங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. சில ரோகிகள் இங்கிருந்தே தங்களது வாழ்நாட்களைக் கழித்துவிடுகிறார்கள். சிலரோவெனில் வெறுப்படைந்து வெளியேறுவதும் உண்டு.

இதைச் செங்கற்பட்டுக்கு மாற்ற ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஜன நெருக்கமுள்ள இச் சென்னையிலிருப்பதைவிட வேறிடம் போவது நலமே. சென்னைக்குச் சமீபமானதும் நல்ல காற்று முதலிய சௌகரியங்களை உடையதுமான,செங்கற்பட்டில் இதற்குப் பிரத்தியேகமான கட்டடம் தயாராகிவருகிறது. கூடிய சீக்கிரம் சர்க்காரார் இதை அவ்விடத்திற்கு மாற்றி இன்னும் ஏராளமான அனுகூலங்களை இக்கொடிய வியாதியால் கஷ்டப் படுபவர்களுக்குச் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பச்சையப்பன் கல்லூரி (Pachayappa's College) — இது சைனபஜாரின் மேற்குக் கோடியில் எஸ்பிளனேடில் இருக்கிறது. இக் கல்லூரியும் இதில் அடங்கியுள்ள உயர்தரக் கலாசாலையும் ஹிந்து மாணவர்களது படிப்பிற்கென்றே ஏற்பட்டுள்ளன. சுமார் நூறு வருஷங்களுக்குமுன் இறந்துபோன பச்சையப்ப முதலியார், எங்கும் படிப்பே அபூர்வமாக இருந்த காலத்தில் சில கலாசாலைகளை வைத்து நடத்தப் பொருள் உதவினர். அவரது நன்கொடையினல் நடைபெற்றுவருவன சென்னையிலுள்ள கல்லூரி மாத்திரமேயன்றிக் காஞ்சீபுரத்திலும், சிதம்பரத்திலும் ஏற்பட்டு நடைபெற்றுவரும் உயர்தரக் கலாசாலைகளுமாம். முந்திடவுனில் நடைபெற்று வந்த இக் கலாசாலை 1850-வது வருஷம் மார்ச்சு மாதம் 20-ந்தேதி, இப்பொழுது அக்கல்லூரி இருக்குமிடத்திற்கு மாற்றப்பட்டது. 1888-வது வருஷத்தில்தான் கல்லூரி வகுப்புகள் இதில் ஏற்படுத்தப்பட்டன. 1889-வது வருஷத்தில் பி. ஏ. வகுப்பு இதில் திறக்கப்பட்டது.

இந்நகரில் இக்கல்லூரிக்கு ஹாஸ்டல் ஒன்று ஏற்படுத்த இடம் கிடைக்காததால் சேத்துப்பட்டு ரயில் ஸ்டேஷனுக்கருகில் இதன் ஹாஸ்டல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கிருந்து மாணவர்கள் சௌகரியமாக அடிக்கடி அவ்விடத்திற்கும் கோட்டைக்குமுள்ள ரயில் வண்டியில் இக் கல்லூரிக்கு வந்து போகிறார்கள்.

கிறிஸ்தவர் கல்லூரி (Christian College) — இது எஸ்பிளநேடில் பீச்சுக்கு சமீபத்தில் இருக்கிறது. இது ஆரம்பத்தில் 1837-வது வருஷத்தில் ரெவரெண்ட் ஆண்டெர்ஸன் துரையால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆதலால் இப்பொழுதும்கூட இதை ஆண்டர்ஸன் கலாசாலை என

...டு. இது காலக்கிரமத்தில் விருத்தியடைந்து ... வருஷத்தில் ...லூரியாக ஏற்பட்டது. ... வாண்ட் மில்லர் என்றவர் இக் கல்லூரியின் பிரின்ஸிபாலாக ஏற்பட்டு அவர் இதிலும் இதில் கல்வி கற்ற மாணாவர்களிடத்தும் , காட்டிய பிரியத்திலிருந்தும் எடுத்துக்கொண்ட சிரமத்திலிருந்தும் இதை "மில்லர் கல்லூரி" யென்று பெயரிட்டழைக்கத் தலைப்பட்டனர். இதில் படிக்கும் பிராமணர்களுக்கும், மற்ற ஜாதி மாணவர்களுக்கும் பிரத்தியேகமான ஹாஸ்டல்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன.

சட்டக் கல்லூரி (Law College) — இது பிராட்வேக் கருகில் எஸ்பிளனேடில் ஏற்பட்டிருக்கிறது. இக் கட்டடம் ஹைகோர்ட்டுக் கட்டட அமைப்பை ஒட்டிக் கட்டப்பட்டுள்ளது. விசாலமான பிரசங்கம் செய்யத் தகுந்த ஹால்கள் அநேகத்திலும் ஏற்பட்டு நடுவில் திறந்த முற்றத்துடன் கூடியுள்ளது. இது 1891-வது வருஷத்தில் மாணவர்களுக்குச் சட்டங்களைப் போதிக்க ஏற்படுத்தப்பட்டது. முன் பிரஸிடென்ஸி காலேஜில் வைத்து நடத்தப்பட்டு வந்த சட்ட வகுப்புகள் 1891-வது வருஷத்தில் இவ்விடத்திற்கு மாற்றிக்கொண்டு வரப்பட்டன. இக் கல்லூரியின் புத்தகசாலை (Library)யில் மூன்று பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு ரீடிங்ரூம் இக்கல்லூரிக்குச் சேர்ந்திருக்கிறது. அதில் அநேகம் முக்கியமான சட்ட சம்பந்தமான பத்திரிக்கைகள், முதலியன தருவித்து வைக்கப்பட் டிருக்கும்.

ரிப்பன் கட்டடம் (Ripon Buildings) — இப்பெரிய சென்னை நகரைப் பரிபாலித்து வருவது கார்ப்பொரேஷன் ... நகரபரிபாலன சங்கம். இச் சங்கத்திற்கு ஒரு ... சபாபதி ஏற்பட்டிருப்பதுடன் சர்க்காரால் நிய...

மனம் செய்யப்படும் ஒரு கமிஷனரும் (Commissioner) ஜனப் பிரதிநிதிகளான அங்கத்தினர்களு மிருந்துவருகிறார்கள். வீட்டுவரி தொழில்வரி முதலிய வரிகளை ஜனங்களிடமிருந்து வாங்கி, இவர்கள் வீதி நிர்மாணம், ஜலசப்ளை, மின்சார வெளிச்சம் முதலிய அனுகூலங்களைச் செய்து வருகிறார்கள். அவ்வவ் விஷயங்களைக் கவனிக்கச் சிப்பந்திகளை நியமித்திருக்கிறார்கள். முக்கியமான விஷயங்களைத் தீர்மானம் செய்ய அடிக்கடி சபை கூடுகிறார்கள்.

இச்சபைக்குச் சொந்தமான கட்டத்திற்கு ரிப்பன் கட்டடம் என்று பெயர். இது ஒரு விஸ்தாரமான அழகு வாய்ந்த கட்டடம். பெரியமெட்டு என்ற பகுதியில் சிங்காரத்தோட்டத்தின் தென்மேற்கு மூலையில் இக்கட்டடம் அமைந்திருக்கிறது. 1913-ம் வருஷத்தில் இக்கட்டடம் முடிவுபெற்றது. இது 252 அடி நீளமும் 126 அடி அகலமுமுள்ள இடத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதன் மத்தியில் 132 அடி உயரத்தில் நான்கு திக்குகளிலும் மணிகாட்டக் கூடிய கடிகாரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இக் கட்டடத்திற்கு மூன்று மேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Printed at the Guardian Press, 158-B. Broadway, Madras. 1924.